# பாதை

PAATHAI

FRANCIAN IMSSIONARY BROTHERS


**ஆண்டவருக்கான வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்கான பாதையைச் செம்மையாக்குங்கள்** (மத் - 3.3)


பாதை 10 | தை-பங்குனி 2013 | பயணம் 40


## தூர நோக்குடன் மாற்றங்களை ஏற்படுத்துவோர்கள் நம்பிக்கை மேம்பட பணியை விஸ்தரிக்கவேண்டும்!

-பிரான்சீஸ்கள் அதிசிரேஸ்ட சகோதரர் ஜோஸ்வரிஜேறா-

சவால்கள் நிறைந்த யுகத்தில் பணியாற்றும் யாவரும் தூரநோக்குடன் பணிகளை விஸ்தரிக்கவும், மாற்றங்களை அர்த்தமுள்ளதாக்கி நம்பிக்கை வாழ்வை கட்டி எழுப்பவேண்டும் என இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரான்சீஸ்கன் சகோதர சபையின் அதிசிரேஸ்ர சகோதரர் ஜோஸ் வரியரா CMSF அவர்கள் இலங்கையில்09.01.2013இல் ஏக்கலை மாகாண செயலகத்தில் நடைபெற்ற வரவேற்பில் தெரிவித்தார்.

ஏக்கலை இலங்கை மாகாண தலைமையகத்தில் அருட்பணி இம்மானுவேல் பெர்ணாண்டோ அ.ம.தி. தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் அருளுரையாற்று கையில் துறவறத்தின் புனிதம் காக்க மக்கள் வாழ்வில் நம்பிக்கை மலர உழைப்பதுடன் துறவறத்தின் மேன்மை சிறக்க செயல்பட வேண்டும். இதற்கு பிரான்சீஸ் அசிசியார் வாழ்வு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்றார். இலங்கைக்கு வருகை தந்த அதிசிரேஸ்ட சகோதரர்களை நவோதய இல்லத்து மாணவர்களும், ஏக்கலை பொதுநிலையினரும் அருட்சகோதரர்களும் அன்புடன் வரவேற்று கலந்துரை யாடினர்.

பிரான்சீஸ்கன் இலங்கை மாகாண பொதுச் சபையின் கூட்டம் பிரான்சீஸ்கன் தலைமை சகோதர சபையின் அதிசிரேஸ்ர சகோதரர் ஜோஸ்வரிஜேறா CMSF தலைமையில் உதவி அதி சிரேஸ்ர சகோதரர் ஜோச் கோட்டிஜில் CMSF, அதிசிரேஸ்ட சபை ஆலோசகர் சவிரிமுத்து அம்புறோஸ் குழுவினர் இலங்கை பிரான்சீஸ்கன்

புதிய மாகாண தலைவர் ஆலோசகர்களை மாசி மாதம் 11ம் திகதிமுதல் 15ம் திகதிவரை நடைபெறும் நிர்வாக சபை கூட்டங்களில் தெரிவுகள் செய்யப்பட்டு வெளியிடப்பட வுள்ளது.



இலங்கைக்கு வருகை தந்த பிரான்சீஸ்கன் அதி சிரேஸ்ர சகோதரர்கள் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களையும் குருமுதல்வர் ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் அவர்களை யும் 10.02.2013 காலை சந்தித்து கலந்துரையாடியபின் யாழ் மறைமாவட்டத்தில் இளவாலையில் அமைந்துள்ள பிரான்சீஸ்கன் சகோதரர்களின் புதிய பணித்தளமான சென்யோசப் விடுதி மாணவர்கள், நிர்வாகத்தினரின் வரவேற்பில் கலந்து மாலை கொழும்பு திரும்பினார்கள்.

## மானுடத்திற்கான பத்தாண்டு சேவை பேருவகை தரும் ஒரு விடயமாகும்...!

அதி சிரேஷ்ட சகோதரர் ஜோஸ்வரிஜேறா பாராட்டு



*அன்பார்ந்த சகோதரத்துவ வாழ்த்துக்கள்!*

*"மரியாளின் தூய திரு இருதயத்தின் இலங்கைக்கான செய்தியை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரப்பும் திருப்பணியை மேற்கொண்டுவரும் தங்கள் அதிகார பூர்வ தொடர்பு ஏடாகிய 'பாதை' தனது பத்துவருடகால சேவையை பூர்த்தி செய்திருப்பது பற்றி அறிவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்" என பிரான்சிஸ்கன் அதி சிரேஷ்ட சகோதரர் ஜோஸ்வரிஜேறா தனது வாழ்த்துக் கடிதத்தில் தெரிவித் திருக்கிறார்.*

*அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்: "தங்களது இந்த பத்தாண்டு சிறப் பிதழானது இலங்கையில் தங்களது அப்போஸ்தலிக்கு பணி அனுபவத்தைப் பிரதிபலிப்பதாயிருக்கிறது. மானுடத்திற்கான 10 ஆண்டு சேவையை பூர்த்திசெய்வதென்பது உண்மையில் பேருவகைக்கான ஒரு விடயமே.*

*நாட்டின் நலனுக்கான தங்கள் பணி மிகுந்த பெறுமதி மிக்கதாகும். நீங்கள் சந்திக்கும் அனை வருக்கும் சமாதானம், அன்பு, தியானம், நீதி, நியாயம் ஒன்றுபடல் மற்றும் நேர்மை போன்ற புனித பிரான்சிஸ்குவின் விழுமியங்களையிட்டு அது புத்துணர்வு ஊட்டுவதாக அமையட்டும்.*

*இத்திருப்பணிக்கான உங்கள் முயற்சிகளனைத்திற்கும் இறையாசி வேண்டுகிறேன்.*



### பாதைக்கு வயது பத்து

வாழ்வுக்கு வழிகாட்டும் பாதை
வள்ளல் யேசுவின் வழிசெல்லும் பாதை
வறுமையை நேசித்த வடிவழகன் பிரான்சீசின்
வழியிலே நடக்கின்ற பாதை

பொறுமையைச் சோதிக்கும் சாத்தானை வெல்ல
அருமையாய் வழி சொல்லும் பாதை
மறுமையை நினைவூட்டும் பாதை - பிற
மதத்தோரும் மதிக்கின்ற பாதை
அசீசியார் என்றழைக்கும் புனிதராம் பிரான்சீசை
பின்பற்ற அழைக்கின்ற பாதை
'பிரான்சீஸ்கன் சோதர்கள்' என்று அழைக்கப்படும்
துறவிகள் வழிநடத்தும் பாதை
நான் சொல்லும் பாதை அது பத்திரிகை
பத்தாண்டை நிறைவு செய்து மகிழ்கிறது
நூற்றாண்டு வாழ்க' என வாழ்த்துகிறோம்!
படித்துச் சுவைத்துப் பயன்பெறுவோம்!

-நவாலியூர் நாயகி-

## பிரான்ஸிஸ்கன் சபையின் யாழ் வருகையின் இரண்டாம் ஆண்டு

பிரான்சீஸ்கன் சகோதர சபை யாழ் வருகைப் பணித் தளமாக இளவாலை சென் யோசப் விடுதியை பெறுப்பேற்று இரண்டாவது ஆண்டு நிறைவு காணும் நல்முயற்சிக்கு அனுமதி தந்த யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளின் ஆசீரு டன் சிறப்பான ஒத்துழைப்பு நல்கி பல முன் னேற்றம் காண முன்நின்றுழைக்கும் புனித கென்றி அரசர் கல்லூரி அதிபர் யேசுதாஸ் அடிகளாரும் பாடசாலை சமூகத்தையும் பல மாக்கி மாணவர்களின் கல்வி விளை யாட்டு. ஆன்மீக ஆளுமை வளர்ச்சியில் புது தென்பூட்டும் காலத்தையும் அருளிய இறை வனுக்கு நன்றி கூறுவோம்.

2011 தைத்திங்கள் 8ம் நாள் யாழ் குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானபிரகாசம் அடி களின் ஆசீரும் அருளுரையும் ஊகப்படுத்த பிரான்சிஸ்கன் சகோதர சபையினரின் ஆலோசகர்கள் மாகாணத் தலைவர் அருட் சகோதரர் தொபியாஸ் அவர்களையும் அழைத்துச் சென்ற மனப்பதிவுகள். மாண வர்களின். பாடசாலை சமூகத்தின் அழைத் தலுக்கு அர்த்தமூட்டிய நிகழ்வுகள் நீண்டு இளவாலை மாதகல் மக்களின் ஆன்மீக சமூக பணிகளை பரவலாக்கி மாணவர் களின் முயற்சியில் முன்னேற்றங்கள் சாட் சியாக வளர்ந்து சென்யோசப் விடுதி புதுப் பொலிவடைகிறது.

நல் மனங்களின் ஒத்துழைப்பும் உபசரிப்பும் மாணவ செல்வங்களின் முன்னேற்றத்தில் காட்டும் அதிபர். ஆசிரி யர்கள் காட்டும் அக்கறையும் பல சாதனை களை பதிவாக்கியது பெரும் சிறப்பாகும்.

நல்லுறவை பலமாக்கி இறைபணியை தொடர ஒத்துழைத்த யாவர்க்கும் இறை ஆசிர் வேண்டி நன்றி சொல்கிறோம்.






பிரான்சீஸ்கன் சகோதர சபையினர் 2011ம் ஆண்டு இளவாலை சென்யோசப் விடுதியை பெறுப்பேற்கும் நிகழ்வில் யாழ் குரு முதல்வரும் கென்றிஸ் அதிபருடன் விடுதி மாணவர்களும் சபை சகோதரர்களை வரவேற்கும் காட்சி.

பிரான்சீஸ்கன் சபையின் முன்னேற் றத்துக்காக பங்கேற்று பயணிக்க நல்லுள் ளங்களின் உறவாடல் புதிய தளம் அமைக்க காணிகள் தந்து ஊக்கப்படுத்தியமை பிரான்சிஸ்கன் பணிகள் மேலும் பரவிட வழி பிறந்தது.

நற்சமூகம் மலர்வதில் இறைசாட்சி யாக ஏழ்மையிலும் தாழ்மையிலும் அசீசி யின் வழிநின்று ஆன்மீக வாஞ்சையுடன்

புனித பிரான்சீஸ்கன் அருட்சகோதரர் யாழ் நகரில் இளவாலை சென்யோசப் மாணவர் விடுதியில் தம் பணியை இரண்டாவது ஆண்டை நிறைவு செய்து தொடர இறைவன் தந்த அருட்பொழிவை எண்ணிப்பார்க்கிறோம். பசுமையான இக்காலம் வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



"உள்ளத்தால் உருகி உணர்வால் பகிர்ந்து தவத்தின் புனிதம் காப்போம்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதையின் பார்வையில்...

## "இதை என் நினைவாக செய்யுங்கள்"

யேசு

பணிகள் பலவாக ஏற்று மனித வாழ்வை மையமாக்கி "என்பின்னே வாருங்கள்" எனும் குரலுக்கு செவி சாய்த்து பின் சென்ற சீடத்துவம் என்பது இறை திட்டத்தில் முன்னிருக்கைக்கு முண்டி அடிப்பதல்ல முதலானோர் கடசியாவார். கடைசியானோர் முதல் வராவர் சீடனாக இருக்க விரும்பும் எவரும் உலகமாயைக்குள் சிக்கிவிடுதல் ஆகாது.

பொதுநிலையினரும், திரு நிலையினரும் இறைதிட்டத்தை நிறைவேற்றும் முக்கிய பணியாளரே என் பதை பதவிக்காகவோ, கடமைக்காகவோ, தொழிலாகவோ, சுயவிளம்பரத்துக்காகவோ திசைமாறாது இறை பாதையை செப்பனிடவே அழைக்கப்படுகிறார்கள். உயர்வு, தாழ்வு சிக்க லில் சிக்கி உங்கள் வாழ்வை சிதைத்துவிடாதீர். "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்பதனை இக்காலத்தில் எதை நினைவாக செய்தீர்கள்? என்பதன் அடையாளத்தைக் காட்டுங்கள். மறைந்தும் மறவாத பலரது பணிவாழ்வு இன்றும் பலரால் நினைவுகூரப்படுகிறது. பதவிக்காக முண்டி அடிப்போர், புகழுக்காக குறுக்கு வழி நாடுவோர், செயல்களில் தூய்மை இன்மையுடையோர் தவறுக்கு தம்மை உடந்தையாக்குவோர் தம்மை மீட்டுக் கொள்ள இத்தவக்காலம் அழைக்கிறது. இறை சன்னிதியில் வாக்குறுதியோடு தம்மை மாற்றி தூய பாதையில் செல்ல இன்று ஓர் சந்தர்ப்பமே தவக்காலம். சுயதரிசனம் செய்து மனச்சாட்சி முன் தவறுகளை இனம் காண்போரே புதுவாழ்வை அனுபவிக்கலாம். பிறர் தவறை அறிய முற்படும் நாம் எம் தவறை இனம்காண தயங்காது தவறை களைய கிடைத்த சந்தர்ப்பம் இக்காலம் என ஏற்றுக்கொள்வோம்.

"என்னை யார் என்று சொல்கிறார்கள், நீர் யார் என கூறுகிறீர்?"

இவை எம் வாழ்விலும் உங்களை யார் என சொல்கிறார்கள், என நீர் உணர்கிறீர் என்பதே சுய ஆய்வின் முடிவாகலாம். தவறாக புரிந்து தவறிழைக்காது தவறை மாற்ற முன்வரும் சந்தர்ப்பமே தவத்தின் சிறந்த காலமாகட்டும். பொது நிலையினரும், திரு நிலையினரும் பிறரில் குற்றம் சுமத்தி தப்பிக்கும்போதெல்லாம் சிலுவைப் பாதையில் சித்தரிக்கும் பாத்திரமாகவே உள்ளனர். "பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்" என்பதை மீட்டுப் பாருங்கள். அறியாமல் செய்த பாவங்களை விட அறிந்தும் செய்யும் தவறுகளுக்கு ஆதரவு கொடுக்க முன் நிற்காது உண்மைகள் உணரப்படும் போது பொய்மைகள் களைய சந்தர்ப்பமாகும் என்பதில் கிறிஸ்து அவர்களாக மாறுங்கள். உங்கள் முன்மாதிரிகள் உங்கள் சூழலை சுத்தப்படுத்தும் வெளிப்பாடுகளாகட்டும். குடும்பத்தில் களையப்படும் செயலில், சிறுவர்கள் மனம்மாற சந்தர்ப்பமாகும். தன்னை ஒறுத்தல், தவறுக்கு வருந்துதல், இறைபயம் கொண்ட வாழ்வை கற்றுக் கொடுப்பதில் முன்மாதியாகுங்கள். ●



# எமது மறைக் கல்வி மறுமலர்ச்சி காணுமா?

-யோகா-

ஆன்மீகத்தின் வழிகாட்டிகள் யார் என்ற கேள்விக்கு விடை காண ஒருவர் மற்றவர்மீது பொறுப்புக்களை கூறி தப்பித்தலில் இருந்து விடுபடுதல் முதல் வழியாகும். இதனை ஏற்றுக்கொள்வோர் மறுமலர்ச்சியின் பங்காளராகி சமூக சீரின்மை களைவதிலும் வழிகாட்டியாவார்கள்.

மறை அறிவு குன்றுதலே சகல சமூக சீரின்மைக்கும் காரணமாகிறது எனக் கூறப்படுகிறது. அதன் வழிகாட்டிகள் தம் கடமைகளை செய்வதாக கூறினாலும் அதன் பொருள் உணர்ந்து வாழ்வோடு மாற்றும் செயல்வழிகாட்டல் அருகி நிகழ்ச்சி நிரலுக்கு திருப்திப்படுவதால் ஆன்மீகம் அர்த்தமிழந்து விடுகிறது.

மறைவழி ஆசான்கள், சிறந்த பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள், மத வழிகாட்டிகளான குருக்கள், கன்னியர், துறவறத்தினர், பொதுநிலை பக்தி சபை அங்கத்தவர் என எல்லோரும் தமது நிலையில் மேற்கொள்ள தவறிய வழிகாட்டலே சமூக சீரின்மை வன்முறைப் போக்காகவும், ஆன்மீக பற்றுறுதியின்மைக்கும், அருட்சாதனங்களின் மகத்துவம் பொருளற்றதாகி களியாட்ட சடங்காக மாறிவருகிறது. திருவிழாக்கள் போலிச் சடங்குகளாகி வருகிறது.

பணச் சடங்கிலும், பகட்டான விழாக்களிலும், புகைப்பட கலைஞர்களின் வழிகாட்டலிலும் வெளிக்களியாட்ட விருந்துகளிலும், அருட்சாதன முக்கியத்துவம் அர்த்தமிழந்து போவதா? காலத்தின் தேவை கருதி சகல தரப்பினரும் உணர்ந்து செயல்பட்டால் ஆன்மீக அருட்சாதன புனிதம் காக்க வழி பிறக்கும். (குறிப்பாக முதல் நன்மை, திருமணம், குருத்துவம், போன்றவை) பரிச்சைக்கான மறைக்கல்வி முறை வாழ்க்கைக்கான வழிகாட்டல் இன்மையாகிவிட்டது. சான்றிதழ்கள் பெறும் எவரும் புள்ளிகள் பெறும் சாதனையாளர்களாகிவிட்டனரே தவிர ஆன்மீகத்தில் பூஜியமே வாழ்வாகிவிடுகிறது) கற்றலுக்கும் வாழ்வுக்குமான இடைவெளிக்கு ஏனைய பாடங்களை விட சமய பாடம் மிகவும் பின்தங்கியமைக்கு பொறுப்புள்ளோரின் பொறுப்பற்ற தன்மையே காரணமாக உள்ளது.

ஆன்மீகத்தை குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் கற்றுக்கொள்ளும் கல்வியாக்கமுடியாது. அவை வாழ்வுடன் எத்தருணத்திலும் கற்பதுடன் வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும். சான்றிதழ் கல்விக்காக கற்போர் வாழ்வில் வெளிப்படுத்த சுயநலத்தையே பெற முனைவர். அப்படி பெறும் சான்றிதழ் முறை போலியானது. மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குவதன் அர்த்தம் என்ன? அதன் மதிப்பீடுகள் எத்தருணத்தில் சிறுவர்களை ஊக்கப்படுத்தும். அதன் பெறுமதி மதிக்கப்படுமா? யாரால் எங்கே மதிக்கப்படுகின்றது? இதைவிட பரிசாக சிறிய அறிவூட்டும் நூல்கள் அவர்கள் அறிவு மேம்பட உதவலாம்? வாசிப்பு திறன் வளரவும் வழி பிறக்கும்.

சிறுவர்களிடம் எதை பரிசீலிப்பது? வழிகாட்டப்பட்டதை நடைமுறைப்படுத்துகிறார்களா என்பதனை கண்காணிப்பது யார்? இதுவே சிறந்த மறை வழிகாட்டிகளின் கடமையாகவேண்டும். நற்கருணையின் மகத்துவம், ஆலயத்துள் மதிக்கப்பட அதனை பெற்றவருக்கு இருக்கவேண்டிய பக்தி உணர்வுகள், அதில் ஏற்பட்ட மனமாற்றம், தவறுகள் உணரப்படும் இடத்து மன்னிப்புக் கோரும் மனப்பக்குவம், வழிபாட்டு முறைகள், பக்திக்கான மனநிலை, தூண்டலுக்கான வழிகாட்டல், நற்செய்தி பற்றிய தேடல், அருளுரையின் அர்த்தங்கள், அவை பற்றிய மனப்பதிவுகளான மறைக் கல்வியில், பாடசாலையில் கேட்டு, எழுதி வர தூண்டல், சிறுசிறு நற்காரியங்களை செய்வித்தல். இவை முன்னைய கால வழிகாட்டல்போல் "பூச்செண்டு" முறைகள் அறிமுகஞ் செய்தல், பதிவை மீட்டுப்பார்க்கும் மனப்பாங்கு கலந்துரையாடல்கள் பாடசாலையிலும், மறைக்கல்வியிலும் தூண்டும் போது பெற்றோரின் வழிகாட்டலும் துணை செய்யும் சிறிய நூல்கள், சிறந்த படங்கள், பரிசுகள் கொடுத்து ஊக்கப்படுத்தும் பாராட்டும் சந்தர்ப்பங்கள், விளையாட்டு மூலம், விவாத அரங்கு மூலம் சிறந்த பேச்சுவன்மை, திறமை வெளிப்பாடுகள், தேடல்கள் சிறு சிறு ஊக்கப்படுத்தலே மதிப்பீடு முன்னேற்றங்களாக பங்குமட்ட ஏனைய மறைக் கல்வி தரிசிப்புகள்மூலம் ஏற்றத்தாழ்வற்ற ஒற்றுமை செயலால் தேவைக்கேற்ற பதிவுகள், ஆன்மீகத்தை மட்டுமல்ல ஆளுமை உள்ள சிறந்த தலைவர்களாக உருவாக்கிய பங்குத் திருச்சபையை பாராட்டி வெளிப்படுத்துங்கள்.

எமது பகுதியில் பக்தி சபைகளில் இளையோர் இணையவும், பணிகளை பரவலாக்கவும் புதிய பல தலைவர்களை உருவாக்கவும் தேவை கருதி சமூக சீரின்மைகள் அகலவும் ஆன்மீக வளர்ச்சியில் எமது ஆலயம், எமது பங்கு முன்மாதிரியாகவும் அமைதலுக்கான ஆரம்ப சிந்தனை மனமாற்றக் காலமான இன்றே ஆரம்பிப்போர் உண்மைச் சீடத்துவத்தின் மறை ஆசான்களே. இதில் நீங்கள் பங்காளராவதே சமூக மாற்றத்தின் முதல் படியாகும். மறுமலர்ச்சியின் மறைக்கல்வி மேம்பட மகிழ்வுடன் கற்கும் சூழலை உருவாக்கும் நாளில் விரும்பி பங்கேற்கும் சிறுவர்களை என்னிடத்தில் வாருங்கள் என்ற வார்த்தைக்கு அர்த்தம் வெளிப்படும். ●


**Address**


The Editor,
'Pathai',
Franciscan Brothers.

The Editor,
'Pathai',
St. Josep Boys Home,
Illavalai.

No. 194/A1, Convent Rd,
Elala - Ja - Ela
Sri Lanka.

E-Mail: Paathaicmsf@gmail.com


விலை 10/=, ஆண்டு சந்தா 100/=



## பத்தாண்டில் ஒரு முத்து

பத்தாண்டு பயணித்து ஒரு முத்தாய் ஒளிர்கின்ற
பிரான்சிஸ்களின் "பாதை" சொத்து
முத்தான் ஆக்கங்களால் முத்தாரமிட்டு
கற்போரைக் கவர்கின்ற முகவரியும்கொண்டு
வித்தாகி மரமாகி விருட்சமாய் வளர்ந்து
விசுவாச வாழ்வையே விருந்தாக வழங்கி
பத்தொன்றும் நூறென்றும் பலனையே கொடுக்கின்ற
மறைவாழ்வுப் "பாதையே" நீடூழி வாழ்கவே!

சிறுமலரில் தேன் நுகரும் வண்டுபோல்
எண்திசை ஆக்கங்களும் எழுத்தினிலே வடித்தாய்!
குறிவடிவம் கொண்டே விரைவாகப் பயணித்து
நிறைவடிவ நிகரான ஏடாகத் திகழ்கின்றாய்!
நறுமணமாய் நின்புகழ் நாற்றிசையும் பரவியே
நனி சிறப்பை பெற்றே நற்பாதை காட்டிடுவாய்!
வீறுநடை போடும் விடியலின் "பாதையே"
வெள்ளிபொன் விழாக்கண்டு நூறாண்டு வாழியவே!

கவிஞர் "அபீர்ராஜன்"
ஆசிரிய ஆலோசகர்
யாழ். கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலர் தினம்

ரோஜாவை மட்டுமல்லாமல் மனங்களைப் பரிமாறி விழிகளால் கதை பேசி... நாமெல்லோரும் களித்திருக்கும் இந்நாள்... இது உண்மையிலேயே ஒரு துயரந் தோய்ந்த நாள்.

வலண்டையன் என்ற பாதிரியார் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்ட நாள் இது. அந்த நாள் கி.பி. 270ஆவது வருடம் – பெப்ரவரி 14ஆம் திகதி. இந்த தினம் தான் காதலர் தினம்.

இது ஏன் வந்தது? எப்படித் தொடங்கியது? என்று தெரியுமா?

கொடூரமாகவும் கோமாளித்தனமாகவும் ஆட்சி புரிந்த ரோமானியச் சக்கரவர்த்தி இரண்டாவது கிளாடியின் முட்டாள்தனமான கட்டளைகளால் அவனை விட்டு அவனது இராணுவ வீரர்கள் விலகிப் போயினர். புதிய இராணுவ வீரர்களை அவனால் சேர்க்க முடியவில்லை. யாரும் முன்வந்து இராணுவத்தில் சேர மறுத்துவிட்டார்கள். அவனது மந்திரி பரிவாரங்களுக்கு வீரர்களைச் சேர்ப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதையும் அவனுக்குக் கொடுக்கவும் முடியவில்லை. இதனால் எரிச்சலுற்றான் கிளாடி.

தனது அந்தரங்க நாயகியுடன் சல்லாபமாக இருந்த நள்ளிரவொன்றில் எரிச்சல் உற்று மறைகழன்ற ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடியின் மனதில், "திருமணமானவர்கள் தமது அன்பு மனைவியை விட்டு வர மனமில்லாமலும் திருமணமாகாதவர்கள் தம்து காதலியை விட்டு வரமனமில்லாமலும் இருப்பதாலேயே இராணுவத்தில் சேரத் தயங்குகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் குடும்ப வாழ்க்கை என்ற ஒன்று இல்லாத பட்சத்தில் இவர்கள் மனம் வெறுத்து இராணுவத்தில் சேருவார்கள். போரிலும் மூர்க்கத்தனமாய் போரிடுவார்கள். வெற்றி எளிதில் கிட்டும்" என்றொரு முட்டாள்தனமான எண்ணம் தோன்றியது.

உடனேயே நள்ளிரவு என்றும் பாராமல் தன் அந்தரங்க அமைச்சரை அழைத்து "ரோமபுரி நாட்டில் இனி யாருமே திருமணம் செய்யக்கூடாது. ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் ரத்துச் செய்யப்படவேண்டும். இந்த அரச கட்டளையை மீறுபவர்கள் யாராயினும் கைதுசெய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப்படுவார்கள். பின்னர் அறிவிக்கப்படும் ஒரு நாளில் பொது இடத்தில் வைத்துக் கல்லால் அடித்து தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்படுவார்கள்" என்ற அறிவிப்பை மக்களுக்குச் சொல்லும்படி பணித்தான். அரசனை மீற வழி தெரியாத அமைச்சர் அதனை அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்டு மக்கள் அதிர்ந்தார்கள். இரு மனங்கள் இணைவதை அரசன் அறுத்தெறியத் துணிந்தபோது திருமணங்கள் கனவாகிப் போனதில் ரோமாபுரி சோகக் கண்ணீரில் மிதந்தது.



அரசனின் இந்த முடிவு அநியாயம் என்று சொல்லிக் கொதித்தெழுந்த கிறிஸ்தவ பாதிரியார் வலண்டைன் அரச கட்டளையை மீறி இரகசியத் திருமணங்களைச் செய்துவைத்தார்.

இந்தச் செய்தி அரசனுக்கு எட்டிவிட வலண்டைன் கைது செய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

அவர் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் சிறைக்காவல் தலைவனின் கண் தெரியாத மகளான அஸ்டோரியஸ்க்கும் பாதிரியார் வலண்டைனுக்குமிடையில் காதல் என்னும் அன்பு பூத்தது.

அஸ்டோரியஸ் பாதியாரை சிறையிலிருந்து மீட்க முயன்றாள். இதையறிந்த அரசன் அஸ்டோரியசை வீட்டுச் சிறையில் வைத்தான். கண்கள் கிடைத்துவிட்டது போன்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்த அஸ்டோரியஸ் தன் கனவுகள் சிதைந்ததில் கலங்கினாள். ஆனால் வலண்டைனுக்கான மரணதண்டனையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அஸ்டோரியஸ்க்கு ஒரு கரகித அட்டையை வரைந்துவிட்டு தண்டனையை ஏற்க அவன் தயாரானான்.

வலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தலைதுண்டிக்கப்பட்ட அந்த நேரத்தில் அத்தனை கட்டுக்காவல்களையும் மீறி வலண்டைனிடமிருந்து வந்த அந்த அட்டையின் வரிகளை தோழி வாசிக்க அஸ்டோரியஸின் கண்களிலிருந்து கண்ணீர்ப் பூக்கள் சொரிந்தன. அந்த அட்டையிலிருந்த கவிதை வரிகள்




விழி இருந்தும்
வழி இல்லாமல் ~ மன்னன்
பழி தாங்கிப் போகிறேன்.
விழி இழந்து பார்க்க
வழி இழந்து, நீ மன
வலி தாங்காது கதறும்
ஒலி கேட்டும், உனை மீட்க
வழி தெரியாமல் மக்களுக்காக
பலியாடாகப் போகிறேன் ~ நீ
ஒளியாய் வாழ்! பிறருக்கு
வழியாய் இரு!!
சந்தோச ஒளி உன் கண்களில்
மின்னும்!!
உன்னுடைய
வலண்டைனிடமிருந்து~




அன்றிலிருந்து இன்றுவரை நேசிப்பாளர்களிடையே பரிமாறப்படும் வைரவரிகள் இவை. இதுவே முதல் வலண்டைன் மடல். அரச கட்டளையை மீறி மணங்களை இணையவைத்துத் தன்னையே பலி கொடுத்த பாதிரியார் ரோம் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்றிருந்தார்.

ரோமானிய தேவாலயங்கள் ஐரோப்பியக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு இந்தத் தினம் பாகான் (மதமற்றவன்) தினம் எனக் கொண்டாடப்பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களுக்குப் பிறகு போப்பாண்டவர் ஒருவரால் வலண்டைன் புனிதராக அறிவிக்கப்பட்டு வலண்டைன் தினம் (St. Valentine's Day) உலகம் முழுவதும் கொண்டாடத் தலைப்பட்டது. இதுவே காதலர் தினம்.

நன்றி இருக்கிறம்

# பாஸ்கா நிகழ்ச்சிகள் பெயர்

தன் தலைமகன் இறந்ததையும், "இறப்பு இல்லாத வீடு எதுவுமில்லை" என்ற அளவுக்கு இத்துன்பம் கொடியதாகவும் மாறியதைக் கண்ட பார்வோன் மன்னன், "நீங்களும் இஸ்ரயேல் மக்களும் எழுந்து என் மக்களிடமிருந்து வெளியேறிச் செல்லுங்கள். போய் விடுங்கள்" என்று மோசேயை விரட்டினான் (வி.ப. 12:31,32)

அதே நேரத்தில் எபிரேயர்கள் புளிப்பற்ற அப்பத்தை உண்டு பயணத்துக்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனும் கட்டளையும் பாஸ்கா விழா கொண்டாட வேண்டும் என்ற கட்டளையும் தரப்படுகிறது (2:21-32) இதன் பின்னணி என்ன?

"பெஸ்சா" என்ற எபிரேயச் சொல்லைத்தான் "பாஸ்கா" என்று மொழிபெயர்க்கின்றோம். இதற்கு "கடந்து செல்லல்" அல்லது "தாண்டிச் செல்லல்" என்பது பொருள் (வி.ப. 12:13) இங்கே இரண்டுவித "கடத்தல்" நடைபெறுகிறது. "தலைமகன்" கொள்ளப்படும் இறுதி அருஞ்செயலில் கடவுளின் தூதர் இரத்த அடையாளமிட்டிருக்கும் இஸ்ரயேலரின் கதவுகளைத் "தாண்டி" (கடந்து) எகிப்தியர் வீட்டினுள் நுழைத்து, தலைமகனைக் கொல்கிறார்.

அடுத்ததாக, அடிமைத்தனத்தில் வாழும் இஸ்ராயேலர் எகிப்திலிருந்து "கடந்து" விடுதலை வாழ்வுக்குச் செல்லவிருக்கின்றனர். இந்த இரண்டாவது கடத்தலை உருவகமாகச் சுட்டிக்காட்டவே இஸ்ராயேலர் செங்கடலை "கடந்து" சென்றனர் என்கின்றார் விவிலிய ஆசிரியர் (வி.ப. 12:27) ஆனால் இதற்கு இரண்டு காலத்து வரலாற்றுப் பின்னணி உண்டு.

**பாஸ்கா விழா**

தொடக்கத்தில் எபிரேயர்கள் நாடோடிகளாக, இடையர்களாக வாழ்ந்தனர். அப்போது அவர்களுக்குக் குருக்கள் யாரும் இல்லை. பலிபீடமும் இல்லை. மக்களாகவே ஆண்டவருக்கு ஓர் ஆட்டுக்குட்டியைப் பலியாக ஒப்புக்கொடுத்தனர். தங்கள் ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் கிடைக்குமாறு இவ்வாறு செய்தனர். அத்துடன், தங்கள் கூடாரத்தின் கழிகளில் அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தடவி அசுத்த ஆவி அகலச் செய்தனர். (வி.ப. 12:13,33)

மேய்ச்சலுக்கு ஆடுகளை ஓட்டிச்செல்லும் வசந்தக் காலத்திற்கு முன் இப்பலி நிறைவேற்றப்பட்டது. அதனால் தான் நாடோடி வாழ்வின் தன்மைகள் இப்பாஸ்கா விழாவில் காணப்படுகின்றன.

ஆதலால் எகிப்தில் இஸ்ராயேலர் நாடோடிகளாய் வாழ்ந்ததற்கு முன்னமே இவ்விழா கொண்டாடப்பட்டது. அப்படியென்றால், முன்னமேயுள்ள ஒரு வழக்கத்தை இஸ்ராயேலர் எகிப்திலிருந்து விடுதலை பெறும் நிகழ்ச்சியின் கொண்டாட்டமாகக் கடவுள் மாற்றினார் என்கிறார் ஆசிரியர்.

**புளிப்பற்ற அப்ப விழா**

"மசொத்" என்றால் புளிப்பற்ற அப்ப விழா. வாற்கோதுமை அறுவடையின் தொடக்கத்தில் இவ்விழா கொண்டாடப்பட்டது. புதுவாழ்வைத் தொடங்குவதற்கு அடையாளமாக புதிய அறுவடையின் தானியத்தை முதல் ஏழு நாட்கள் உண்பர். அதே நேரத்தில் கடவுள் முன் வெறுங்கையுடன் செல்லாமல் (வி:ப 23:15 34:20) முதற்கனிகளையே இறைவனுக்கு அளிக்கத் தொடங்கினர். இப்படி முதற்கனி விழாவும் தோன்றியது (லேவி 23:9-4)

ஆனால் இவை யாவும் கானான் நாட்டில் இஸ்ரயேலர் குடியேறிய பின்தான் தோன்றியது (லேவி 23:10) ஏனெனில் இரண்டு விழாக்களும் உழவுத் தொழிலுடன் தொடர்புடையது. எபிரேயர் கானான் நாட்டில் குடியேறிய பின் கானானேயர்களிடமிருந்து கற்றுக்கொண்டு அறுவடையின் காலமான நீசான் மாதத்தில் கொண்டாடினர்.

புளிப்பற்ற அப்ப விழாவிற்கு அண்மையில் வந்த பாஸ்கா விழாவும் நீசான் மாதத்தில் தான் கொண்டாடப்பட்டது. எனவே இரு விழாக்களையும் ஒன்றாக இணைத்துக்கொண்டாடினர்.

அநேகமாக யோசியா மன்னனின் சமயச் சீர்திருத்தத்தின்போது (கி.மு. 62) அல்லது பாபிலோனிய அடிமைத்தனத்தின்போது (கி.மு 587-539) இப்படி ஒன்றாகக் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். (1 அர 22, 23) ஆக, அபிரேயர் வாழ்க்கையில் எகிப்திய அடிமைத்தனத்துக்கு முன்பே தோன்றிய பாஸ்கா விழாவையும், கானான் நாட்டில் குடியேறியபின் தோன்றிய புளிப்பற்ற அப்ப விழாவையும் ஒன்றாகக் கொண்டாடினர் (லேபி 25: 5-8) கி.மு. 4-5 ஆம் நூற்றாண்டில் விடுதலைப் பயணத்தைத் தொகுக்கும் போது இவ்விழாக்களை இறையியல் காரணத்துக்காக எகிப்திய விடுதலை நிகழ்ச்சியோடு இணைக்கிறார் விவிலிய ஆசிரியர்.


எகிப்திலிருந்து இஸ்ரயேலர் விடுதலை பெற்ற நிகழ்ச்சியும் ஆண்டின் இதே காலத்தில் நிகழ்ந்தது. மேலும் இவ்விரு விழாக்களம் எகிப்திய விடுதலையை நினைவு கூறும் விதத்தில் இருந்தன (வி.ப 23:15 இ.ச. 16:16) பழைய பாஸ்கா விழாவை எகிப்திய விடுதலையுடன் எப்பு இணைத்துக்காண முடிந்தது?

புதுவாழ்வின் அடையாளமே பாஸ்கா விழா இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுதலை பெற்று, உரிமை வாழ்வு வாழப்போவது ஒரு புது வாழ்வுதானே! அடுத்து பாஸ்கா விழாவின்போது முதற்கனியை பலியாக ஒப்புக்கொடுப்பர். இங்கேயும் முதற்கனியாகிய எகிப்தியத் தலைமகன்கள் பலியாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றனர்.

இத்தகைய ஒப்புவமையை ஏற்படுத்திய விடுதலைப் பயண நூல் ஆசிரியர் பாஸ்கா விழாவை எகிப்திய விடுதலையுடன் இணைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வந்து போகும் தவக்காலம்
வழமைபோல் இம்முறையும்
சிந்தனையில் மாற்றமில்லை அதுவும்
வழமைபோல்தான்
எந்தனை மாற்றி வாழ்வைச்
சீர்தூக்கிப் பார்க்கும் காலம்
வந்தது வருகின்றது இனிமேலும்
வரும் - ஆனால்
என்னை அது மாற்றியதா? உன்னை
அது மாற்றியதா?
நெஞ்சிலே கை வைத்து
உண்மையைச் சொல்வதென்றால்
கொஞ்சமும் மாற்றமில்லை என்னை அது மாற்றவில்லை.
கல்வாரிப்பாடுகளை ஒருகணம் நினை என்று
திருச்சபை சொல்கிறது திருச்சிலுவை சொல்கிறது
சிலுவைப் பாதையின் பதினான்கு நிலைகளையும்
சுற்றி வருகின்றோம் முழங்காலில் நிற்கின்றோம்
வெளியே வந்தவுடன் ஊர் வம்பு முதல் வேலை
ஆபாச உடைகளுடன் ஆலயம் வரும் பெண்கள்
தவக்காலச் சிந்தனையால் மனம் மாறும் நிலை வருமா?
போதைக்கு அடிமையாகும் ஆண்களும் பெண்களும்
வாதையை அனுபவித்த யேசுவை நினைப்பார்களா?
பாலியல் வன்முறைக்கு பாலகரை இழப்பவர்கள் - சிலுவைப்
பாதையின் மூலம் மனந்திரும்ப வாய்ப்புண்டா?
கத்தியை எடுத்துக் குத்திக் கொல்பவர்கள்
புத்தியைப் பாவிக்கத் தவக்காலம் உதவுமா?
கல்வாரிப் பாதையில் கால்கடுக்க நடந்துபோய்
தன்னுயிரைத் தந்து எம்முயிரைக் காத்தவரை
கொஞ்சம் நினைப்போமா? மனமாற்றம் பெறுவோமா?

-நவாலியூர் நாயகி-




ஒரு தசாப்தங்களை வெற்றியோடு முடித்து வீறுநடை போடும் "பாதை பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்

தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் சுருங்கிப் போய்விட்ட இக் காலத்தில் கிறிஸ்தவ பத்திரிகை ஒன்றை தொடர்ச்சியாக வெளியிடுவது சாதனையான செயல். ஏதேன் தோட்டத்தின் நடுவில் உள்ளம் மரம் "உண்பதற்குச் சுவையான காயும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத் தக்கதாகவும் இருந்தது..." (தொ.நூல் 2:6) பாவம் மனுக்குலத்தில் பெருக இதுவே காரணமாக அமைந்தது. கவர்ச்சி மனுக்குலத்தை வீழ்த்தியது.

ஊடகங்களும் போட்டி போட்டு மக்கள் மனதில் இடத்தைப் பிடிக்க கவர்ச்சியாக வெளியிடுகின்றன. இந்தப் போட்டித் தன்மைக்குள் இயேசு கிறிஸ்துவின் "பாதை" தான் உலகில் சிறந்த "பாதை" அதில் யாத்திரை செல்வதுதான் மகிமையான வாழ்வு என்பதை "பாதை" பத்திரிகை சுட்டும்.

இயேசுவின் "பாதை" கவர்ச்சி அற்றது. துன்பம் நிறைந்தது. கரடுமுரடான கொல்கொதா நோக்கியது. இயேசுவின் "பாதை" சிலுவை "பாதை". இந்தப் "பாதை" யில் செல்வது கடினம். ஆனால் இப்பாதையில் தான் உயிர்ப்பு என்ற மறைபொருள் உண்டு. உயிர்ப்பு என்ற மரிமை மாட்சிமை உண்டு.

"பாதை" வாசகன் இயேசுவின் "பாதை"யில் செல்ல எம் வாழ்த்துக்கள்.

"பாதை" பத்திரிகை குழுவினருக்கு எம் வாழ்த்துக்கள். இறையாசீர் என்றும் உங்களுடன் இருக்க யாசிக்கின்றோம்.

வி.ப். தனேந்திரா
ஆசிரியர் - தெளிவு

Me

Fraternal Greetings! I a
official communication orga
years of service in dissemin
Heart of Mary Province to the
Lanka.

This Decennial Souve
experience of apostolic activit
matter of joy to have complete
community.

Your contribution is mu
the Province. The Franciscan
righteousness, justice, integ
propagated to everyone you m
May god Almighty ble
mission.

With every good wish,
Yours fraternally,
Bro. Jose Valliara, CMSF

**அசிசி** நகரில் அக்காலத்தில் நடுத்தரக் குடும்பங்களிலுள்ள வாலிபர், பிரபு மக்கள் சிலரோடு கலந்து உல்லாசமாய்ப் பொழுது போக்குக் குழுக்களாய்க் கூடுவார்கள். வருஷம் முழுவதும் மிதமிஞ்சிய திராட்சைப் பானத்தோடு கூடிய விருந்துகள் ஆர்ப்பாட்டம் செய்யும் கூட்டங்களாய்த் தெருத்தெருவாய் ஆடியும் பாடியும் திரிவார்கள். இராவேளைகளில் வனிதையரின் சாளரங்களின் கீழ் நின்று, காதல் கவிகள் பாடுவார்கள். விசித்திரமான. ஏளனத்திற்கிடமான காவியங்களும், கவிகளும் அமோகம், ஒழுங்குமுறை என்ன என்பது இவர்களுக்குச் சுத்த சூனியம், இந்த இராச்சுற்றித் திரிபவர்களின் எல்லை கடந்த குறும்புச் செயல்கள், அந்நகர அதிகாரிகளையே அதில் தலையிட்டுத் தடை உத்தரவு பிறப்பிக்கும்படி செய்தன.

தருணத்திற்குத் தருணம் பிரான்சிசுடைய பெற்றோர், "நீ என்ன இராசா வீட்டுப் பிள்ளையா? தண்ணீர் போல் காசை இறைத்து இந்த ஒட்டுயிர்களுக்கு உன் செலவில் தின்னக்கொடுக்க?" என்று இவருடைய ஊதாரித்தனமான நடத்தையைக் கண்டித்தாலும் பெரும் பணமும், பிள்ளைப் பாசமும், உடையவர்களாதலால் இவருடைய நடத்தையில் குறிக்கிடாது, இவருடைய விளையாட்டுப் போக்கைக் கண்டும் காணாதவர்கள் போல் இருந்தனர். எப்படி இருந்தாலும் இந்த ஊதாரி வாலிபன், அவர்களுடைய அன்புப் புதல்வனல்லவா? ஒரு காலத்தில் திருந்தி விடுவான் என வாளாவிருந்தனர். பிரபுக்கள் மத்தியில் தன் செல்வன் நடனமாடுவதை எண்ணி, பியேத்றோ பேர்ணடோணே தன் மனத்திற்குள் உவகை கொள்வார்.


தன்னெண்ணம் கொண்ட நம் இளைஞனின் நடத்தை எவ்வளவு காலம் இப்படியாய் இருந்திருக்க வேண்டுமென்று வாசகர் வினவலாம். பிற்காலத்தில் இவர் "நான் பாவத்திலே சீவித்தேன்" என்று தம்மைத்தாமே நொந்து கொள்வதை நாம் அவதானிப்போம். அப்படியாயின், இவருடைய நடத்தை எவ்வாறாக இருந்திருக்கக்கூடும்? இவ்வினாவிற்கு ஆசிரியர்கள் பலர், பற்பல ஆதாரங்களைக் காட்டிப் பலவகையான விடைகளையளிக்கின்றனர். இவருடன் கூடச் சீவித்தவரான செலானோ தோமையார், அக்காலத்தில் பிள்ளைகள் வளர்க்கப்பட்டு வந்த விதத்தை ஆதாரமாகக் கொண்டு, பிரான்சிசும் ஓர் அட்டா துட்டிப் பையனாயும், பழிபாதகங்களை விளைவிக்கும் குறும்புக்காரரின் தலைவனாயுமிருந்திருக்க வேண்டுமென்று பொதுப்படையாகக் கூறுகிறார்.

பல ஆண்டுகளின் பின் ஸ்பேயர் ஜூலியன் என்ற இன்னுமொரு வரலாற்று ஆசிரியர் செலானோ தோமையாரைப் பின்பற்றி, பிரான்சிசைப் பாவிகளுக்கு ஒரு முன்மாதிரிகையாய்க் காண்பித்தார். 1238இல் இவருடைய உற்ற நண்பரான ஒன்பதாம் கிறகோரியார் பாப்பிறை, இவரை, உலக மாயைகளிற் சிக்கி, பின் கற்பையே தனக்கு வரித்துக் கொண்டவராய்த் தோற்றுவிக்கிறார். இவ்வாறு பலரும் பலவாறாகக் கூற, புனித பொனவெந்தூர் "பிரான்சிஸ் எப்பேர்ப்பட்ட தப்பான நடத்தையுடையவராய் இருந்தாலும், மாமிச இச்சைகளின் மாயைகளுக்கு இவர் விட்டுக்கொடுத்தவரல்லர்" என்று தப்பபிப்பிராயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

ஒரு பாவியோ, இல்லையோ, இளம் பிரான்சிஸ் ஒரு தூர்த்தனுமல்ல, நெறிகெட்டவனுமல்ல. இவர் காதலித்ததாக எந்தப் பெண்ணின் பெயரையாவது, எவரேனும் மறைமுகமாயேனும் கூறியதில்லை. இவருடைய நடத்தையில் சில, பெலவீனங்களாகக் காணப்பட்டாலும் அவை கண்ணியம் தப்பாததாயிருக்கும். இவர் யார் மேலாவது பாசம் கொண்டால், அது மகிமைக்காப்பாளரிடம் காணப்படும் ஓர் உயரிய குறிக்கோளைக் கொண்டதாயிருக்கும்.

நாம் வாசிக்கவிருக்கும் சரித்திரத்தில், இவர் கசையால் தன்னை அடித்துக்கொள்வதையும், முட்புதர்களில் உருண்டு புரளுவதையும் கண்டு, பாவச்சோதனைகள் இவரைத் தாக்குவதை அறிவோம். ஆனால், இவருடைய நடையும் பேச்சும் ஒரு துரைமகனுக்குத் தகுந்ததாயிருக்கும். யாராவது இவரிடம் தகாத வார்த்தைகள் பேசினால், இவர் ஒருபோதும் பதிலளிக்கமாட்டார். "கண்ணியமும், காருண்ணியமும் இவரே" என்று சொல்லும் அளவுக்கு இவர் தம்முடைய பெருந்தன்மையைப் பரப்பி நின்றார். எவரையும் புண்படச்செய்யாமலும் எல்லோருக்கும் அதிக வணக்கம் காட்டியும், யாவராலும் நேசிக்கப்படக் கூடிய விதமாய் நடந்தும் வந்தார். இவருடைய பழக்கவழக்கங்களின் சீர்மையை அவதானிக்கும் எவரும், இவரை ஒரு மகாபிரபுவின் புதல்வரெனக் கூறுவர். சுருங்கக் கூறின், இவர் ஓர் அரசிளங் குமாரனுக்குரிய பண்புகளோடு பிறந்தார். எல்லாவற்றிற்கும் தானே முந்தி நிற்கவேண்டுமென்று இவருக்குள்ள அவாவைப் பிறர் மன்னித்தனர். மறந்தனர்.

இவ்வித நடத்தையினால் இவர் தன்னுடைய சூழலுக்கு அப்பாலும் அறியப்பட்டதோடு, வரும் காலத்தில் பேரும், புகழும் அடைவார் என்று பலரும் சொல்லிக்கொள்ளத் தொடங்கினார்கள். இவரை அவதானித்த ஒரு கள்ளங்கபடமற்ற வயோதிபர், இவர் குறுக்கிடும் போதெல்லாம் இவர்முன், தன் மேலங்கியைக் கழற்றி இவர் நடந்துபோகும்படியாக இவர் பாதையில் வரிப்பாராம். இதைக் கண்டு ஏளனம் செய்வோருக்கு "வருங்காலச் சந்ததியார் இவருக்கு அளிக்க இருக்கும் சங்கை மரியாதையை முன்னிட்டு, இப்பொழுது நான் பியேத்றோ பேர்ணடோணே என்பவரின் மகனுக்கு மரியாதை செய்கிறேன்" என்பாரென்று புனித பொனவேந்தூர் எழுதி வைத்திருக்கின்றார். இச் சிறு குறிப்புக்களிலிருந்து,



# அசிசியார்

பிரான்சிஸ் புகழ் அடைவதையே சதா கனவு கண்டார் என்று நாம் ஊகிக்க இடமுண்டு. அக்காலத்தில் போரில் கலந்துகொள்வதால் தான் புகழடையலாம். போரில் விருப்புக்கொண்டவர்களுக்கு அந்தக் காலத்தில் சந்தர்ப்பங்களும் ஏராளமாயிருந்தன. பிரான்சிஸ் வளர்ந்ததும் உள்நாட்டுக் கலகங்கள் மத்தியில்தான்.

கடந்த முப்பது ஆண்டுகளாக அசிசி நகரம் சுதந்திரத்திற்காகப் போராடி வந்தது. 1174இல் அங்குள்ள வணிகர்கள் தங்கள்மேல் சுமத்தப்பட்ட அந்நிய ஆட்சியை உதறி எறிய எத்தணித்தார்கள். செயலில் இறங்கியபோது, அது அவர்களுடைய வல்லமைக்கு அப்பாற்பட்டது என அனுபவத்திற் கண்டார்கள். 1177இல் பிறெட்றிக் பார் பறோஸ்ஸா தன்சார்பிலுள்ள கொண்றாட் கோமகனைத் தனது ஸ்தானிகராக நியமித்தான். அதன் விளைவாக அங்குள்ள நடுத்தர வகுப்பினர் தங்கள் அரசியல் உரிமைகளை மேலும் இழந்து, வரிச்சுமை தாங்காது, பழிவாங்கும் திட்டங்களை வகுக்க எத்தனித்தனர். 1197ம் ஆண்டு பல எதிர்ப்புக்கள் மத்தியில் ஆறாவது என்றி ஆட்சி உரிமைபெற்றதால்,

ஜேர்மானிய அரசியல் விஷயங்கள்
ஜேர்மானிய ஆதிக்கத்திலிருந்து
இத்தாலி தேசத்திற்கு இ... வே தக்
பாரிகளின் கூட்டுச் ச...ங்கள்
கொண்றாட் கோமகன் தனது அர
பார்த்து, அசிசி நகரவாசிகள் ஜே
தரைமட்டமாகத் தகர்த்தனர். தங்க

அவர்களுடைய முதற் க
காப்பான ஒரு மதிலைக் கட்டுவதி
கற்களைக் கொண்டு, ஒரு மதிலை
முடித்தனர். இம்மதில் இப்போது
எஞ்சிய அழிபாடுகளை இன்று
வயதுடைய பிரான்சிஸ் இக்கல
கட்டுமான வேலையைக் கற்றுக்கெ
பங்குபற்றினார் என்று சொல்லுவத

ஜேர்மனியரைத் தம் நாட்
வாசிகள் நின்றுவிடவில்லை. அடுத்
மீறிய வரிகளை விதித்துத் த
தடைப்படுத்திவந்த பிரபுக்களின்
துக்கொள்வதில் சென்றது. மனையு
தீக்கிரையாக்கி, அவைகளின் சொ
கண்டுபிடிக்கப்பட்ட பிரபுக்களை
களைத் தகர்த்தெறிந்தார் ... ஜேர்
வர்களின் சொத்துக்களைப் பறிமு
அடைந்த விடுதலையை அசிசி
கவில்லை. அசிசியிலிருந்து தப்
பழிவாங்கும் நோக்கமாக அத
பெறுஜீயா நகரைத் துண்டித்
பெறுஜீயா தன் அயலிலுள்ள அ
நகர்களுக்குமிடையே ஒரு கொடும்

இப்போர் பத்து ஆண்டு
1202ஆம் ஆண்டு கார்த்தின
கீழ்ப்பாகத்திலுள்ள சண் ஜோவன்
வெகு கெம்பீரமாகப் பிரான்சிசும்
கப்பட்டு பெறுஜீயாவிற்குப் பிணை
இவருடைய சிறைவாசம் 1203ம் ஆ
இருந்திருக்கலாம். பெறுஜியச் சி
இவருடைய போர்முனையில் புகழ
அல்லது உண்மை வீரனுக்குரிய
இயல்பாயுள்ள மகிழ்ச்சியையோ,
போல் இவருடைய நடையுடை பா
ளோடு சிறையில் வைக்கப்பட்டார்.

ஏனைய பிரபுக்கள் தங்
பிக்கொண்டிருக்கையில், இவர் தப
சங்கிலிகளைப் பார்த்து நகைப்ப
காணப்படுவார். ஒருமுறை "உன
நிலையிலும் உனக்கு நகைப்பா?"
"பிற்காலத்தில் எனக்கு நடக்கவிருப்
அனைத்தாலும் போற்றிப் புகழ
கும்போது எப்படி நான் தூக்
ரைத்தார். கைதிகளுள் ஓர் இள
காததால் ஏனையவர்கள் அவனை
சிஸ் மாத்திரம், அப்படிச் செ
ஞனை வசப்படுத்தி மற்றப் பிரபுக்க
பிரான்சிசில் காணப்பட்ட நற்குண
எவராலும் எதிர்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ssage

m very happy to learn that the
n PATHAI has completed 10
ating news of the Immaculate
various parts of the country, Sri

enir is a reflection of your
ies in the Province. It is indeed a
ed 10 years in this service to the

ch valued for the well being of
values of peace, love, charity,
grity and honesty are to be
eet.
ss all your efforts towards this

ில் அபசகுணங்கள் காணப்பட்டன.
தன்னை விடுவித்துக்கொள்வதற்கு,
அ[illegible]றியாகத் தோன்றிற்று. வியா
இ[illegible]மயத்தைப் பயன்படுத்தின.
ணைவிட்டு வெளியூர் சென்ற சமயம்
மாணிய அரசனைத் தாக்கி அதைத்
ர் கூட்டுச் சங்க ஆட்சியை நிறுவினர்.
வனம், தங்கள் நகருக்குப் பாது
சென்றது. தகர்க்கப்பட்ட அரணின்
யும் வியக்கத்தக்க விரைவில் கட்டி
தகர்ந்துபோயிருந்தாலும், இதன்
ம் நாம் காணலாம். பதினைந்து
வரங்களில் கலந்து ஓர் அளவிற்கு
காண்டாலும், கொலை பாதகங்களில்
கில்லை.
டிலிருந்து விரட்டியதுடன் அசிசி
ததாக அவர்களின் கவனம், அளவிற்கு
ங்கள் நகரின் வியாபாரத்தைத்
ஆட்சியிலிருந்து, தங்களை விடுவித்
சிகளினால் உள்ள கோட்டைகளைத்
ந்தக்காரரைக் கொன்றார்கள். நகரில்
க் கொன்று அவர்களின் மாளிகை
மா[illegible]க்கு ஆதரவாளராய் இருந்த
தல் செய்தார்கள். ஆனால் புதிதாக
கர் அதிக காலத்திற்கு அனுபவிக்
பியோடிய பிரபுக்கள் அதனைப்
னோடு சதாபகை கொண்டிருந்த
க்கொண்டிருந்தார்கள். 1201இல்
சிசியோடு போர்தொடுத்தது. இரு
போர் நடந்தது.
களுக்காகிலும் நீடித்திருக்கலாம்.
மாதத்தில், பெறூஜியாவின்
ரி என்ற பாலத்தில் நடந்த யுத்தத்தில்
போர் செய்தார். அதில் கைதியாக்
னயாகக் கொண்டு செல்லப்பட்டார்.
ண்டு கார்த்திகை மாதம் வரை நீடித்து
றயில் இவர் கழித்த நீடிய நாட்கள்,
டைய வேண்டுமென்ற அவாவையோ
தைரியத்தையோ அல்லது இவருக்கு
ட்டுப்படுத்தவில்லை. பிரபுக்களைப்
வனைகள் இருந்ததால் இவர் பிரபுக்க

களுக்கு நேர்ந்ததையிட்டு புலம்
ளைக் கட்டி வைத்திருக்கும் இரும்புச்
ார். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன்
கென்ன பைத்தியமா? நாமிருக்கும்
என்று ஒரு கைதி கேட்ட பொழுது
பவைகளையும், நான் ஒரு நாள் உலகம்
ப்படுவேன் என்பதையும் நினைக்
கத்திலிருப்பேன்?" என்று பதிலு
ம் பிரபு மற்றவர்களோடு இணங்
ர ஒதுக்கி வைத்தார்கள். பிரான்
பயவில்லை. பதிலாக அவ்விளை
ளோடு சமாதானம் செய்துவைத்தார்.
ங்களையும், வசீகரத் தன்மையையும்



## பத்தாவது ஆண்டு நிறைவைக் காணும் பாதையை வாழ்த்துகிறேன்...

மிலேனிய தென்றலாய் வீசும் "பாதை"

குரலற்ற மக்களின் குரலாக குன்றின்மேல் (மலையகத்தில்) உதித்த பாதை என்பதையிட்டு மகிழ்ச்சி அடைந்து பத்தாண்டு பல்லாண்டாய் வளர வாழத்துகிறேன்.

டோனா கத்தரீனா றாணியினுடைய யோசவ் வாஸ் கொன்சால் வேஸ் உடைய கண்டி மாநகரின் பொற்காலத்தின் பின் மலையகத்தின் ஆன்மீகமும், வருங்காலமும் புலம்பெயர் தமிழக கிறிஸ்தவர்களில் தங்கி இருந்தது. பின்னர் ஏற்பட்ட இடைவெளியில் மலையக தோட்டத்து தமிழ்வாழ் கத்தோலிக்க அடிப்படை மக்களே இப்பாரிய பொறுப்புக்கு உரித்தானவர்கள்.

கண்டி ஆயர் பேனாட் றெக்னே பின்வந்த லியோ நாணயக்கார தமிழ் கத்தோலிக்கர் மீது காட்டி ஆர்வம் இருந்தது போன்று சுதந்திர காலத்தின் மேய்ப்புப் பணியாளருக்கு எவ்வளவு இருந்தது?

மலையகத் தொழிலாளியின் விழிப்புணர்ச்சி தொழில் சங்கங்கள் ஊடாகவும் வெளிச் சக்திகளினாலும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் வெளியே வளர்ந்த அளவுக்குச் சுதந்திர காலத்து மேய்ப்புப் பணியாளர்களினால் ஈடுகொடுக்கமுடியவில்லை (போல் கஸ்பனின் கூற்று இதுவாகும்) இந்த இடைவெளி மலையக பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர். சபையின் துறவிகளால் குறிப்பாக புதியதோர் பாதை திறக்கப்பட்டது.

இப்பாதையோ பத்து வருடங்கள் அல்ல, நீண்டதோர் பாதை, கண்டி அரசரை போர்த்துக்கேயர் கால பிரான்சீஸ்கன் மிசனறிகள் விளை, நிலமாக்கினர். இன்று உலகளாவிய ரீதியில் பணியாற்றும் அதே பிரான்சீஸ்கன் மறைபரப்பு சகோதர சபை மூன்றாம் மிலேனியத் தென்றலை வீசி, பாதையின் ஊடாக மலையகத்தின் தமிழ் கத்தோலிக்கத்துக்கு புது மூச்சைக் கொடுக்கும் என்பது நம் செபமும் ஆசையுமாகும்.

*சுவாமி ஜெயசீலன்*
*வளன் ஆச்சிரமம் - யாழ்ப்பாணம்.*



## பலரின் வளர்ச்சிபாதைக்கு வழியாக அமையட்டும்

புலரந்திருக்கும் புதிய 2013 ஆண்டு நம் ஒவ்வொருவருக்கும் பயனுள்ளதும் நம்பிக்கையுடனும் சந்திப்பது இயல்பு. நல்லது நன்மைகள் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், தீமை எதுவும் எம்மை அணுகக்கூடாது என்ற விருப்பம் எல்லா மனிதருக்கும் இயல்பாக இருக்கக்கூடியது உணர்வாகும்.

கடவுள்மீது கொள்ளும் நம்பிக்கை நம்மையும் நம் திட்டங்களையும் உந்தித்தள்ளும் சக்தியாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் பணியில் புதிய சகாப்தம் படைக்க இறை நம்பிக்கை கொண்டவர்களாய் விவிலியத்தை அறிந்தவர்களாய், மறைக்கல்வியைக் கற்றவர்களாய் வழிபாட்டில் கலந்து அன்றாட வாழ்க்கையில் இறை அனுபவம் கொண்டு வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நம்பிக்கையுடன் எமது பிரான்ஸ்சிஸ்கன் சகோதரர்களின் வெளியீடாம் "பாதை"ப் பத்திரிகை தனது பத்தாவது வருடத்தில் காலடி வைத்துள்ளவேளை இப்பத்திரிகை ஆசிரியர் மற்றும் ஆசிரியருடன் உடனிருந்து செயல்படும் திரு. ஜோசப்பாலா அவருடன் அனைத்து உறுப்பினர்களையும் நண்பர்களையும் "பாதை" அபிமான எழுத்தாளர்களையும் இவ்வேளை நினைவுகூர்ந்து பாராட்டி வாழ்த்தி தொடர்ந்து "ஆண்டவருக்காக ஆயத்தப்படுத்துங்கள் அவருக்காக பாதையைச் செம்மைப்படுத்துங்கள். (மத்:32) என்ற இறைவார்த்தையை நோக்காகக் கொண்டு வளர்ச்சி பெற்று என்னும் பலரின் வளர்ச்சிப் பாதைக்கு வழியாக அமைய "பாதையை" வாழத்துகின்றேன்.

**அருட் சகோ.செ. தொபியாஸ் CMS**



## உயிர்த்தெழுந்தார்

வெள்ளியன்று பற்பகலில் மரித்த இயேசு
வேதமுற மாலையிலே அடக்கமானார்!
கள்ளர்களும் ஓய்வெடுப்பார் சனியில் அன்று
கட்டாய விடுமுறைநாள் யூதருக்கு!
பிள்ளைகளும் பெரியோரும் மாதர் தாமும்
பேதலித்துச் சனிமுழுதும் ஓய்ந்தி ருந்தார்!
வெள்ளிமுளைத் தே எழுந்து ஞாயி றன்று
விடிகின்ற போதினிலே குறித்தெ ழுந்தார்!

அந்நேரம் கல்லறையைக் காவல் காத்த
ஆயுதம்சேர் பெருவீரர் பூமியின் மேல்
மின்னலுடன் இடிவந்து மோதிற்றேபோல்
மிகப்பெரிய பூகம்பம் நிகழக் கண்டார்!
பொன்னிறத்தில் ஒரு தூதன் வானை விட்டுப்
பூமிக்கு வருவதனை அவர்கள் பார்த்தார்
அன்னவனும் கல்லறையின் கல்லை நீக்கி
அதன்மீது அவன்அமரு வதையும் கண்டார்!

தூதனவன் திருவுருவம் மின்னல் போலும்
தொட்டெடுத்த உடைவெள்ளைப் பனியைப் போலும்
நாதவடி வாக அவன் நிற்கக் கண்டு
நடையிழந்து படைவீரர் மயங்கி வீழ்ந்தார்!
மாதர்களும் வைகறையில் கல்லறைக்கு
வாசமிகும் பெருளோடும் வந்து சேர்ந்தார்
பாறைக்கல் விலகியதும் தேவதூதன்
பக்கத்தில் இருப்பதுவும் திகைத்தே பார்த்தார்!

ஆண்டவரின் திருத்தூதன் அவரைப் பார்த்து
"அறையுண்டு மடிந்தவரைப் பார்க்க வந்தீர்
ஈண்டவரின் உடல் இல்லை உரைத்தவாறே
இயேசுபிரான் உயிர்த்தெழுந்தார்; இங்கே நீங்கள்
வேண்டுமெனில் சடலத்தை வைத்த அந்த
வியத்தகுந்த கல்லறையைப் பார்த்துச் செல்வீர்!"
காண்டகைய செய்திதனைக் கண்ட பின்பு
கட்டாயம் சீடரிடம் போய்ச் சொல்லுங்கள்!"

எனக்கூறி திருத்தூதன் முடித்தான்; வந்த
எல்லோரும் கைப்பொருளைக் கீழே போட்டு
மனக்குமுறல் கொண்டுள்ள சீட ருக்கு
மகத்தான சேதி சொல்லப் புறப்பட்டார்கள்!
தனைக்கண்டு யார் பேசினாலும் கூட
தாம் கண்ட காட்சியினை மறைத்தவாறு
ஜனக்கூட்டம் சீடரையே தேடிச் செல்லும்
தலைவனவன் உயிர்த்த கதை சொல்வதற்கு!



## வாழ்த்துச் செய்திகள்



பாதைகள் பல மாறினாலும் பயணம் மாறுவதுண்டோ பாதையாக பல தடம் புரண்ட உள்ளங்களுக்கு மருந்தாகினாய் உன் வரவால் உவகை அடைந்தோர் ஏராளம். உன் சிந்தனையை பின்பற்றி வாழ்கின்றவரில் நானும் ஓர் அங்கம்.

உன் பணியில் பத்துவருடம் கடந்தது பெரியதொன்றுமில்லை

நூறு வருடங்கள் கடந்து பாதை அறியாதவர் மனங்களிலும் மணம் பரப்பிட வாழ்த்துகிறோம்.

பாதைக்காக பாடுபடும் பிரயாணிகள் சகோதரர்களுக்கு உளம் நிறை வாழ்த்து காலத்தின் தேவை அறிந்து வெளிவரும். ஒவ்வொரு ஆன்மீக கருத்துக்கும் என் வாழ்த்துக்கள். வடக்கில் இருந்து உதயமாகி கிழக்கில் வரும் பாதைக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

பாதையாக நீ இருந்து பலரை நல்வழிப் படுத்தினீர். வாழ்க உம் பணி.

**செ. திலகா**
**களுதாவளை**

## 10 ஆம் ஆண்டு நிறைவைக் காணும் பாதை

10 வருடங்களாக வெளிவந்து மீண்டும் புதிய ஆண்டினுள் நுழைகின்றது என்பதை மனமகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கின்றேன். பாதை என்பது ஒரு இலக்கை இடத்தை அடைவதற்கான வழியாகும். அதேபோன்று நமது இந்த பாதை பத்திரிகையும் 10 வருடங்களாக நேரிய வாழ்வு மற்றும் ஆன்மீக வாழ்வு எனும் அனைவரினதும் இலக்கையும் சீராக செம்மையாக பல தடைகள் சிக்கல்களை தாண்டி அடைவதற்கு வழிகோலியுள்ளது என்றால் அதில் ஐயமில்லை. அது மட்டுமல்லாமல் பல சிறார்களின் பெரியோர்களின் ஆற்றல், திறமைகளையும் பலமுறை கைகொடுத்து எழுப்பியுள்ளது என்பதும் யாம் அறிந்த உண்மையே. எமது திருச்சபையின் கால பாகுபாட்டிற்கு ஏற்ப அதாவது திருவருகை காலம், கிறிஸ்து பிறப்பு காலம், பொதுக் காலம், தவக்காலம், பாஸ்கா காலம் போன்ற ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றவாறு பாதையின் சிந்தனை, வடிவமைப்பு என்பனவும் மாறி அனைவரினதும் மனதிலும் கிறீஸ்தவ சமூகத்திலும் அழியாத தடம் பதித்துள்ளது. "நானே பாதையும் அரணும்" என்ற இயேசுவின் வார்த்தைக்கு ஏற்ப நமது பாதையும் நமக்கு அரணாக அமைந்துள்ளது. ஆண்டவருக்காக வழியை (பாதையை) செம்மையாக்கும் (யோவா 1:23) என்ற வாக்கை நிறைவேற்றுவதிலும் நமது பாதைக்கு பங்கு உண்டு என்றால் அது மிகையாகாது.

அத்துடன் இந்த 10 வருடங்களாக பாதையின் வளர்ச்சிக்கு பலரும் பல வகைகளில் ஒத்துழைத்துள்ளனர். அவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள். சிந்தனைகளுக்கு ஆக்கங்கள் தந்துதவிய வாசகர்கள், பாதையின் வடிவமைப்பாளர்கள், பாதை வமிற்பனையில் பங்கெடுத்தோர் பாதை பற்றிய எமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டோர் அனைவருக்கும் முக்கியமாக இப் பாதை வெளியீட்டில் முக்கிய பங்காற்றிய பரான்சஸ்கன் அருட் சகோதரர்களுக்கும் பாதையின் அனைத்து வாசகர்கள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**ஜோசப் மேரி மௌவிஷா**
**சிலாபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் கட்டுரை

## தகவல் தொழில்நுட்ப துரித வளர்ச்சியின் மத்தியில்

# கத்தோலிக்க பத்திரிகைகள் தமது இருப்பை இழந்துவிட்டனவா?

இன்று விஞ்ஞானம் விரைந்த வளர்ச்சியைக் கண்டுள்ளது. வீட்டுச் சமயலில் இருந்து விண்வெளிப் பயணம்வரை விஞ்ஞானத்தின் வியக்க வைக்கும் வளர்ச்சி காணப்படுகிறது. கொம்பியூட்டரில் காதல் பண்ணி, இன்ரநெற்றில் கலியாணம் செய்து, குளோனிங்கில் குழந்தை பெற்றுக் கொள்கின்ற காலம் இது.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது (1492) அந்தச் செய்தி ஸ்பெயினுக்கு போய்ச் சேர ஆறு மாத காலம் ஆகியது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்டபோது (1865) அந்தச் செய்தி உலகத்திற்குப் போய்ச் சேர ஒரு வாரம் ஆகியது. ஆனால் இன்று எந்தச் செய்தியும் ஒரு நொடிப்பொழுதில் உலகத்தின் அனைத்து மூலைகளையும் எட்டிவிடுகிறது. இதுதான் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி!

"வீட்டிற்குள் உலகம் நுழைந்துவிட்டது" என்றும், "உள்ளங்கையில் உலகத்தை வைத்துள்ளோம்" என்றும் கூறிவந்த நாம் இன்று இணையத்தின் வருகையோடு "விரல் நுனியில் உலகம் விரிகின்றது" எனக் கூறுமளவிற்கு ஊடகப் பாவனை அதிகரித்துள்ளது.

இந்த யுகம் "ஊடக யுகம்" என்று அழைக்கப்படுகிறது. "கப்பல் வைத்திருந்தவன் 19ஆம் நூற்றாண்டை வெற்றிகொண்டான்., விமானம் வைத்திருந்தவன் 20ஆம் நூற்றாண்டை வெற்றிகொண்டான். ஊடக வளமுள்ளவன் இந்த 21ஆம் நூற்றாண்டை வெற்றிகொள்கிறான்." என்று சொல்கின்றார்கள். கைத்தொலைபேசி, இணையம், மின்னஞ்சல் போன்ற நவீன ஊடகப்பாவனை என்றுமில்லாதவாறு இன்று அதிகரித்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் இந்த துரித வளர்ச்சியின் மத்தியில் கத்தோலிக்க பத்திரிகைகளின் இடம் எப்படி உள்ளது என்று சிந்திப்பது காலத்தின் தேவையாகும். இதைப் புரிந்துகொள்வதற்கு மின்னியல் ஊடகங்களின் வருகையும் வளர்ச்சியும் அச்சு ஊடகங்களில் ஒன்றான பத்திரிகையை குறிப்பாக கத்தோலிக்க பத்திரிகைகளை பின்தள்ளிவிட்டனவா? என்பதை நாம் ஆராய வேண்டும்.

ஊடகங்கள் அச்சு ஊடகங்கள் (Print Journalism) என்றும் மின்னியல் ஊடகங்கள் (Electronic Journalism) என்றும் இரண்டாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அச்சு ஊடகங்கள் எனும்போது பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற அச்சோடு தொடர்புடையவற்றையும், மின்னியல் ஊடகங்கள் எனும்போது செயற்கைக்கோள், வானொலி, தொலைக்காட்சி, இணையம் என மின்னியக்கத்தோடு தொடர்புடையவற்றையும் நாம் கருதுகின்றோம்.



**"கத்தோலிக்க திருச்சபையானது தனது நற்செய்திப் பணியின் மிக முக்கிய ஊடகங்களில் ஒன்றாக கத்தோலிக்க பத்திரிகைகளைக் கருதும்போது அப்பத்திரிகைகளை ஊக்குவிப்பதும், வளர்ப்பதும் அனைத்து இறைமக்களின் தலையாயகடமையாகும்."**

அருட்திரு தமிழ் நேசன் அடிகளார்
ஆசிரியர், மன்னா பத்திரிகை, மன்னார் மறைமாவட்டம்

மின்னியக்க ஊடகங்களின் வருகை அச்சு ஊடகங்களை இல்லாதொழித்துவிடும் அல்லது பின்தள்ளிவிடும் என்று தொடக்கத்தில் அஞ்சப்பட்டது. தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியினால் அச்சு ஊடகங்கள் மறைந்துவிடும் என்றே கருதப்பட்டது. கடந்தகாலத்தை நாம் திரும்பிப் பார்க்கின்றபோது அப்படி எதுவும் நடந்துவிடவில்லை என்பது தெளிவாகும். உண்மையில் மின்னியக்க ஊடகங்களின் வருகையின்பின் அச்சு ஊடகத்துறை வளர்ந்து வளமும், வனப்பும் பெற்றுள்ளமை புலனாகும். வானொலி தொலைக்காட்சி போன்ற மின்னியல் ஊடகங்களின் வரவு பத்திரிகைகளின் இருப்பை இல்லாமல் செய்துவிடவில்லை. மாறாக உறுதிப்படுத்தி புத்துயிர் கொடுத்திருக்கின்றது என்றே கூறுவேண்டும்.

இன்றைய காலத்தில் இவை இரண்டும் சமபலம் பெற்ற ஊடகத்துறைகளாகவே உள்ளன. எனினும் மின்னியல் ஊடகங்கள் வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன. இன்றைய இளைய தலைமுறையினர் இவற்றின்பால் அதிகம் ஈர்க்கப்படுகின்றனர் என்பது உண்மையே.

தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியின் மத்தியில் பத்திரிகைகள் தமது இருப்பை இழந்துவிடவில்லை என்னும்போது கத்தோலிக்க பத்திரிகைகளும் தமது இருப்பை இழந்துவிடவில்லை என்று கூறலாம்.

இன்று இலங்கையிலே பல மறைமாவட்டங்களில் தமிழ் கத்தோலிக்க பத்திரிகைகள் வெளிவருகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து "பாதுகாவலன்," மன்னாரில் இருந்து "மன்னா", மட்டக்களப்பில் இருந்து "வெட்டாப்பு", "தொண்டன்", கொழும்பில் இருந்து "ஞான ஒளி", கண்டியில் இருந்து "அருள் ஊற்று", பதுளையில் இருந்து "நீரோடை" பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்களின் சபையில் இருந்து "பாதை" போன்ற பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றில் சில பத்திரிகைகள்தான் தொடர்ச்சியாக வருகின்றன.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் அதிலும் வெறும் 6.1 சதவீதத்தை மட்டுமே கத்தோலிக்கரைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் (இதில் சிங்கள கத்தோலிக்கரும் தமிழ் கத்தோலிக்கரும் அடங்குவர்) இத்தனை தமிழ் கத்தோலிக்க பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன என்றால் அதற்குக் காரணம் இப்பத்திரிகைகள் இன்னும் தம் இருப்பை இழந்துவிடவில்லை என்பதாகும். அதாவது இன்றைய தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியின் மத்தியிலும் தமிழ் கத்தோலிக்க மக்கள் கத்தோலிக்க பத்திரிகைகளை வாங்கவும், வாசிக்கவும் விரும்புகின்றார்கள் என்பதே உண்மை.

அதேவேளையில் இந்த தமிழ் கத்தோலிக்க பத்திரிகைப் பணி என்பது இன்றைய காலத்தில் சவாலான ஒன்றாகவும் உள்ளது என்பது ஒரு பக்கத்தில் கசப்பான உண்மையாகும். இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். மக்களின் ஆர்வமின்மை, வாசிப்பில் நாட்டமின்மை என்பதை முதல் காரணமாகக்கொள்ளலாம். இயல்பாகவே வாசிப்பில் நாட்டமில்லாதவர்கள், செய்திகளை அறிவதில் ஆர்வமில்லாதவர்கள் கத்தோலிக்க பத்திரிகைகளையும் வாசிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

இன்று வளர்ந்துவரும் பத்திரிகையியலின் வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப கத்தோலிக்க பத்திரிகைகளின் உள்ளடக்கம், வடிவமைப்பு, செய்திகளை கவர்ச்சியாகக் கொடுக்கும் முறை இல்லை என்பது இன்னுமொரு முக்கியமான விடயமாகும். வெளிநாடுகளல் ஆங்கிலம் போன்ற மேற்கத்தைய மொழிகளில் வெளிவரும் கத்தோலிக்க பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசகர்களைக் கவர்ந்திழுப்பனவாக உள்ளன. இந்த நிலமை நம்மிடம் மிகவும் குறைவு என்பது இங்கு முக்கியமாக சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

கத்தோலிக்க திருச்சபையானது தனது நற்செய்திப் பணியின் மிக முக்கிய ஊடகங்களில் ஒன்றாக கத்தோலிக்க பத்திரிகைகளைக் கருதும்போது அப்பத்திரிகைகளை ஊக்குவிப்பதும், வளர்ப்பதும் அனைத்து இறைமக்களின் தலையாய கடமையாகும். ஏனெனில் நற்செய்தியை (நல்ல செய்தியை) இந்த ஊடகத்தின் வாயிலாக நாம் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் கொண்டு செல்கின்றோம். ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டுகின்றோம்.

தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியின் மத்தியிலும் தமது இருப்பை இன்னும் இழந்துவிடாத நிலையில் நமது நற்செய்தி அறிவிப்புப் பணியின் மிக முக்கிய ஆயுதமாக கத்தோலிக்க பத்திரிகைகளைக் கொண்டு செயற்படுவோம். எனவே ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் ஒரு கத்தோலிக்க பத்திரிகையாவது இருக்க வேண்டும் என்ற திருச்சபையின் எதிர்பார்ப்பை நிறைவுசெய்ய அனைவரும் இணைந்து செயலாற்றுவோம். ●

# வாழ்த்துச் செய்திகள்



பாதைக்கு பத்தாண்டா?

பாதைக்கு பத்தாண்டா?
வியப்பானாலும் விரையும் உலகில்
வேதனைகள் சோதனைகள் மத்தியில்
ஆன்மீகப் பாதையை செப்பனிட
ஊடகங்களின் பொறுப்புக்களும்
அவசியமானதே, அவசரமானதே.
"ஆண்டவருக்கான வழியை
ஆயத்தமாக்குங்கள் அவருக்கான
பாதையை செம்மையாக்குங்கள்"
எனும் மகுட வாக்குடன்
அசீசியின் வழி நின்று
ஆன்மீக அறிவூட்டும்
அர்ப்பணிப்பான சேவைசிறக்க
வாழ்த்துகிறேன்
பிரான்சீஸ்கன் அருட் சகோதரர்கள்
பயணிக்கும் பணிவாழ்வுடன்
பல புதிய படைப்பாளிகளை
உருவாக்கி உருவாக
இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட்பணி J.X.பேணாட் றெக்னோ
இயக்குநர் கியுடெக் கரித்தாஸ்
யாழ்ப்பாணம்.




பலரையும் இறைவழி சேர்க்கும் பரிசுத்த பாதையாக அமையும் "பாதை" பத்திரிகை தமது தடத்தை அகலப் பதித்த 10ம் ஆண்டை நிறைவு செய்வது எமக்கு நிறைந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

கத்தோலிக்க வழி நின்று பல்வேறுபட்ட விழுமியங்களையும் பொது விடயங்கலையும், அறிவியல் செய்திகளையும் தம் இரு மருங்கும் கொண்டு பூத்துக் குலுங்கும் இப்பத்திரிகை மென்மேலும் பல வளர்ச்சிப் படிகளைக் கண்டு பலரின் நல்வாழ்விற்கு பாதையாக அமையவும் பல எழுத்தாளர்களை வெளிக்கொணரவும் சிறந்த களமாக அமைந்து சிறந்த பணியாற்றிட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மாகாண செயலாளர்,
அருட்சகோதரர் ஜோசப்,
பிரான்சிஸ்கன் சகோதர சபை,
மட்டக்களப்பு.

## தாயக மண்ணின் காவலும் நீயே



கருவினில் கறையின்றி உதித்தவள் நீயே
மாசின்றி என்றும் வளர்த்தவள் நீயே
இறையவன் திட்டத்தை ஏற்றவள் நீயே
சுதனை எமக்காய் சுமந்தவள் நீயே

ஆவியின் அருளால் நிறைந்தவள் நீயே
கிறிஸ்தவ விழுமியங் கொண்டவள் நீயே
எலிசபேத் குதவிட விரைந்தவள் நீயே
கானாவூர் குறையினை களைந்தவள் நீயே

வளனுடன் துணையாய் வாழ்ந்தவள் நீயே
மகனை ஞானத்தில் வளர்த்தவள் நீயே
சிலுவையின் பாதையில் நடந்தவள் நீயே
குன்றினில் தாயாய் தரப்பட்டவள் நீயே

உடலுடன் விண்ணகம் சென்றவள் நீயே
மண்ணக அரசியாய் முடிகொண்டவள் நீயே
பரிந்துரை செய்தெம்மை காப்பவள் நீயே
தாயக மண்ணின் காவலும் நீயே

-அளவையூர் அமலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Born to be a gifted person

**"Being many, we are one body in Christ, depending on one another. Let each one of us; therefore, serve according to our different gifts. Are you a prophet? Then give insights of faith. Let the minister fulfill his office, let the teacher teach, the one who encourages, convince. You must, likewise, give with an open hand, preside with dedication, and be cheerful in your works of charity." (Rom 12:5-8)**

God has created human beings in his own image and likeness, and adorned him/her with marvelous and precious gifts, and to be the crown of creation - to take care of it, to sustain it and to protect and preserve it for generations to come.

However, human beings are not hopelessly confined to the world of their fantasies and illusions; they are not prisoners of their own categories and structure, instead they are created to be trustworthy to God and to mankind. God has rendered humanity with various gifts and qualities, like simplicity, compa ssion, kindness, tenderhearted ness and love. Every human being is born into this beautiful world with pure intentions and sincere motivations. It deepens, how s/he grows into full maturity in this competitive world. Today, our world is full of violence, corruption and discrimination, because every human being is forced to concentrate on power, prestige and wealth. S/he is carrying within himself/herself anger, hatred, revenge, jealousy, envy and even fear in various forms.

Despite the advanced development in every realm of human life, we can see that human beings are discriminated on various grounds: color, race, religion, language, ethnicity, and belief system, even for being good. Why? The main reason is "Fear"; to protect each one's safety and security, and to defend oneself against the constantly changing world.

I had an opportunity to attend a course on *animating community*, to review my own life, at Sadhana Institute, Lonavala, India. It was an enriching, reviving program for me, to identify myself as a gifted person, and my inner feelings of emotions and moods. I could realize that I am deeply rooted in egoism and also extremely individualistic, due to which my inner growth has been blocked for years. When I started to meditate on my past experiences of my success and failures, it also came to my conscious mind my own inner characteristics such as, aggression, irritation, sad ness, depression, misbehaviour, suspicion, frustration, panicky, tension, humiliation, de-motivation, and hurt feelings. Later on I could understand that these emotions and moods are not healthy, and I was possessed with full of negative feelings; it is deep-rooted in me. I have for gotten that I am a gifted person; God has created me as one of the best in His own image comparing to all other creatures. Why to be egoistic? "I" feelings, big headedness; excessive pride and anger can cause psychical, men tal and psychological illnesses, even it can lead to immature and untimely death by severe heart attack, stroke and ulcers and so on.

God emptied himself, and became a servant, as human beings are to save humanity from their sins. St. Francis of Assisi, although he was rich, became poor to serve mankind and to gather the gifts of eternity. After all, whom I am? I have consciou sly started to reflect on me, and asked myself how long I am going to live in this marathon world? Why I am so aggressive and depressed? Why I am guilty and angry? Firstly, I should think of my good qualities and to accept the gracious invitation to live according to the values of the gospel and to be light to the world in my own way and help discover my deepest self. I should drop my negative feelings and choose to be a positive and tenderhearted person, enjoying God-given gifts of freedom and happiness, one ness, kindness and acceptance of self.

Being a Franciscan bro ther, living in a community I must respect, trust and love others, in order to build unity among the brothers and to become a role model for others. God is ready to bring healing of mind, body, and soul. His grace brings me freedom from the power of sin and from bondage of harmful desires and addiction. Do I allow anything to keep me from God's healing touch?

My Reflection on the Course on LEADERSHIP SKILLS at Sadhana Institute, Lonavala,India

Bro.Jayaraj Arulanandan,CMSF
Sri Lanka



## Lent is the season of Grace

We are in the season of lent with that has began with Ash Wednesday with the words: "Repent and believe the Good News". It is a season of Grace and blessings that prepares all of us to the greatest Feast of Easter!" Lent is synonymous with prepare and fasting and basically it is the time for renewal of our own spiritual life. The season of lent makes us all to think and to rethink the real meaning of our own shortcomings and sufferings. Therefore, the lent should be qualitative and quantitative too as St.Augustine states: "Prayer is good when accompanied by fasting " .The lent is a time of prayer, fasting and penance. Only when we partake of Lord's sufferings then we can participate in the joy of His resurrection on the Easter Sunday. Those who do not change during lent, there is no meaning of celebrating the Easter Joy.

"Lord, bless the sinner who asks for your forgiveness and bless those who receive these ashes.may they keep this Lenten season in preparation for the Joy and Easter".

"The time is fulfilled, and the Kingdom of God is at hand; repent and believe in the Gospel" (Mk.1:15)

Wishing you a Blessed and Fruitful Season of Lent!

**Bro.S.Thobias cmsf**

## Our Message

Our heartfelt felicitation cum our prayerful wishes on this invaluable achievement of publishing the "Paathai" paper for an uninterrupted decade. As we are aware this is the only bimonthly paper published and circulated among friends and wellwishers by a Religious Congregation. Therefore we readers of "Paathai" esteem very highly this endeavor undertaken by Franciscan Missionary Brothers in Sri Lanka.

The news conveyed through "Paathai" is immense and praiseworthy as it inculcates a fair knowledge of the dedicated service rendered by Franciscan Missionary Brothers in the hearts of lay faithful who are fortunate to gain access to "Paathai". In fact they adhere to their motto "Deus meus et omnia" wholeheartedly.

We hope and pray that "Paathai" will surely be a God send to spread the kingdom of God through Franciscan Missionary Brothers. As we are in the year of faith "Paathai" will be a great source of strength to lead us in the righteous path in life.

Our sincere wish is to read "Paathai" for many more years. Finally we congratulate Franciscan Missionary Brothers and we thank God almighty for guiding them to prosper in their service in the vineyard of the Lord.

Parishioners of St. Bernadette's Church
Chilaw.

# Saint Francis: the extraordinary life of a holy madman

**Years before he died, Francis was considered a saint, and in eight centuries he has lost none of his prestige.**



United States: "Why you?" a man asked Francesco di Berna rdone, known to us now as St. Francis of Assisi. Francis (1181/2-1226) was scrawny and plain-looking. He wore a filthy tunic, with a piece of rope as a belt, and no shoes. While preaching, he often would dance, weep, make animal sounds, strip to his underwear, or play the zither. His black eyes sparkled. Many people regarded him as mad, or dangerous. They threw dirt at him. Women locked themselves in their houses.

Francis accepted all this serenely, and the qualities that at the beginning had marked him as an eccentric eventually made him seem holy. His words, one writer said, were "soothing, burning, and penetrating." He had a way of "making his whole body a tongue." Now, when he arrived in a town, church bells rang. People stole the water in which he had washed his feet; it was said to cure sick cows.

Years before he died, Francis was considered a saint, and in eight centuries he has lost none of his prestige. Apart from the Virgin Mary, he is the best known and the most honored of Catholic saints. In 1986, when Pope John Paul II organized a conference of world religious leaders to promote peace, he held it in Assisi. Francis is especially loved by partisans of leftist causes: the animal-rights movement, feminism, ecology, vegetarianism (though he was not a vegetarian). But you don't have to be on the left to love Francis. He is the patron saint (with Catherine and Bernardino of Siena) of the nation of Italy.

Consequently, a vast number of books have been written about him. The first of the biographies appeared a few years after his death, and they've been coming ever since. Two more have recently appeared in English. One, "Francis of Assisi: The Life and Afterlife of a Medieval Saint" (Yale), is by Andr Vauchez, a professor emeritus of medieval studies at the University of Paris. The book appeared in France in 2009 and has now been published in English, in a translation by Michael F. Cusato.

The other volume, "Francis of Assisi: A New Biography" (Cornell), is by Augustine Thompson, a Dominican priest and professor of history at the Dominican School of Philosophy and Theology at the Graduate Theological Union in Berkeley. The two books show that the Church is still trembling from the impact of this great reformer.

Francis came from the nouveau riche. His father, Pietro, was a successful cloth merchant in a time when the mercantile class was on the rise and clothes very much made the man. Francis went to school for only a few years, as was typical for a boy of his circumstances and sufficient for acquiring the skills a cloth merchant needed. As a teen-ager, he belonged to a gang of rowdies from prosperous Assisi families who, of a night, would eat a fine dinner, get drunk, and, in the words of Francis's first biographer, commit "every kind of debauchery." Francis, a high-spirited boy, was their leader and paid the bills, which made him popular.

Pietro often went on business trips to France, and Francis, in time, probably went with him. On those journeys, he would have learned both French and the troubadour style of poetry, which, scholars say, infused even his most earthy writings, notably the "Canticle of Brother Sun," said to be the first poem in the Italian language, in which he addresses the sun, the water, and the wind with humble adoration.

Francis's world was filled with violencebetween the papacy and the Holy Roman Empire, between Assisi and other towns, and, in the town itself, between the merchant class and the local nobility. It wouldn't have been a rare day when Francis saw somebody being knifed. In 1202, around the age of twenty-one, he himself went to war, in a battle between Assisi and Perugia. He was apparently glad to go. He got to wear fine clothes and ride an excellent horse. But Assisi was soon defeated, and Francis spent a year in a dank prison, with rats, before his father was able to ransom him.

It was probably in prison that the change in Francis began. As his friends noticed, he had lost heart for revelry. Outside the city walls he found a little abandoned church, and he spent whole days there, praying. Finally, he began sleeping there as well.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




●இன்றைய சமூக சீர்கேடுகளுக்கு சமூகமா சமயமா காரணம்? அ. மலானி மன்னார்

☐முதலில் சமயம், சமூகம் எல்லாவற்றிலும் யாவரும் இருக்கிறீர் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நல்லவற்றுக்கு உரிமைகோருவோர் தீய சமூக சீர்கேட்டுக்கும் பொறுப்புக்கூறும் நிலையை உணர்த்தக் காரணம் யார் என்பதை உணர்ந்து மாற்றம் காணலாம் அல்லவா? இதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம். பாடசாலையில் ஒரு சிலர் சித்திக்கு உரிமைகோரும் ஆசிரியர்கள், பாடசாலைகள் அந்த வகுப்பில் தோல்வி அடைந்த மற்றைய மாணவர்களுக்கும் பொறுப்புக்கூறுவார்களா என்ன?

●மறைக்கல்வி வகுப்பிற்கு வரும் மாணவர்கள் ஆர்வமின்மைக்கு காரணம் என்ன? த. வினி மட்டுநகர்

☐அதுவும் ஓர் பரீட்சைக்கான கல்வித்திட்டம் என எண்ணிக் கொள்வதால் மாணவர்கள் கல்விப்பணியாகக் கொள்ளலாம். மாணவர்கள் ஆர்வமின்மைக்குக் காரணம் ஆர்வத்தை தூண்டும் முறைகளை கையாளவில்லை என்றும் மீட்டுப் பார்த்து திட்டமிடுவது நவீன உத்திக்கு வழிபிறக்கும் அல்லவா?

●கைபேசி, தொலைக்காட்சி ஊடகங்களால் சமூக சீர்கேடுதான் வளர்கிறது என்கிறார்களே இதனைத் தீர்க்கமுடியுமா? S. ஜோச் மட்டுநகர்


☐நவீன யுகத்தில் இவற்றை தவிர்க்கமுடியாது அதனை எதிர்கொண்டு மாறும் விழிப்பூட்டலும் முன்மாதிரியானவர்களுமே தமது முயற்சியில் வெற்றிகாணலாம். குடிபோதை நோய் போல் இதுவும் தொடர் பாதிப்பால் நோயாளிகளாகிவிட்டனர் என்பதனை அவர்கள் உணர வைத்து வெற்றிகாணலாம். குறிப்பிட்ட மணிநேரங்களிலாவது இந் தவக்காலத்தில் தவிர்க்கும் ஒறுத்தலை முதலில் கையாள முயன்றால் அதுவும் ஓர் ஆரம்பமே.

●ஆலயங்களில் திருவருட் சாதனங்களின் மகிமையை நிறைவேற்றும் வழிபாடுகள், சடங்குகளின் புனிதம் மக்களிடம் உணரப்படுகிறதா? R ஜெயராஜன் வவுனியா

☐விருந்து களியாட்டத்திற்குமுன் ஆயத்தப்படுத்தும் அக்கறை இவற்றுக்கு காட்டப்படுதலில் அலட்சியமே புனிதத்தன்மை நலிவடையக் காரணமாகிறது. இதனை திருநிலையினரும், பொதுநிலையினரும் சுயகட்டுப்பாட்டு முறைகளை கையாள ஒன்றிணைந்தாலே சாத்தியமாகலாம். வழிபாட்டின் புனிதம் உணரப்படாதவரை திருவருட் சாதனத்தின் மகிமை பின்னடைவாக அமைந்துவிடலாம் அல்லவா?

●நல்லவற்றை ஆர்வமுடன் தேடிப்படிக்கும் ஆர்வம் குன்றி வருவதற்கு என்ன காரணம் என எண்ணுகிறீர்கள்? M. யேசுதாஸ் யாழ்.

☐வழிகாட்டிகள் நாங்கள்தான் என முன்வந்தால் வாசிப்பு திறன் விருத்தி அடைய வாய்ப்புண்டு. வாசிகசாலைகள் முதல் பாடசாலை வரை பொது அறிவுத் தேடல் குன்றி வர பின் ஊட்டலை கொடுக்க ஆசிரியர், பெற்றோர் முன் வந்தால் முடியாதது ஒன்றல்ல.

## இளைஞனே ஓர் அழைப்பு

அசீசியின் பாதையில் வழிநடக்க
ஆன்மீகப் பணியில் மக்கள் துயர் தீர்க்க
இளைஞனே உனக்கு ஓர் அழைப்பு

க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரம் கல்வி நிறைவுடன் எமது சபையில் இணைந்து நீயும் ஓர் அருட்சகோதரன் ஆகலாம். உடனே விண்ணப் பிக்கவும்.

மாகாணத் தலைவர்
புனித பிரான்சிஸ்கன் சகோதர சபை,
கொண்மன் வீதி, எக்கலை.


## 10 ஆண்டுகளின் முன்...





10 ஆண்டுகளின் முன் மாத்தளை பிரான்சிஸ்கன் சபை ஆலயத்தில் "பாதை" அறிமுகத்தில் சகல அருட் சகோதரர்களுடன் மன்னார் ஆயரும் இணைந்து நிற்கும் காட்சி

## காலியில் புனித செபஸ்தியார் திருவிழா



காலியில் உறுதிப் பூசுதல் பெற்ற மக்களோடு காலி ஆயரும் பங்குத் தந்தையும் அன்னை திரேசா சபை சகோதரிகளும் கூடி மகிழும் காட்சி



காலி மறை மாவட்டத்தின் 20.01.2013 இல் புனித செபஸ்தியார் திருவிழா பங்குத் தந்தை கிறேசியன் அடிகள் தலைமையில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவை காலி மறை மாவட்ட அதி வந்தனைக்குரிய ஆயர் றேமன் கில்லறி விக்கிரமசிங்க ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவ்விழாவில் 43பேருக்கான உறுதிப்பூசுதல் திருவருட் சாதம் வழங்கப்பட்டமை இவ்விழாவில் பங்குமக்களின் பக்தி முயற்சிக்கு கிடைத்த அருட்பொழிவாக அமைந்தது. இத்திருவிழா திருப்பலியில் அன்னை திரேசா சபையினரும் காலி மறைவட்ட பக்தி சபையினரும் ஆலய பங்கு மக்களும் மிக சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

## கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்
### நம்பிக்கையின் ஆண்டு - 2013
## தவக்கால சிந்தனைப்போட்டிகள்

**“இதை என் நினைவாகச் செய்யுங்கள்”**
யேசு

நம்பிக்கையின் ஆண்டு 2013ல் தவக்கால சிந்தனை கருப்பொருளாக “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்னும் தலைப்பில் மக்கள் சிந்தனை தூண்டலால் நம்பிக்கை ஆண்டை சிறப்பிக்க எதை உங்கள் நினைவாகசெய்ய வேண்டும்? என்பதினை வெளிப்படுத்த சகல தரப்பினரும் பங்கேற்க அழைக்கின்றோம்.

**போட்டிகள்**

கவிதை, கட்டுரை, ஓவியம், விவாத அரங்கு.

**கவிதை** 12முதல் 16 வரிகள்.

1. 8ம் ஆண்டு முதல் 12ம் ஆண்டு வரை.
2. திறந்த போட்டி யாவரும் பங்குபற்றலாம்

**கட்டுரை**

சொல்லடக்கம் 250-300 A4 தாளில்
10ம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் வரை

**ஓவியம் (18"24")**

6ம் ஆண்டு முதல் 12ம் ஆண்டு வரை

**விவாதம் (4பேர் அடங்கிய குழு)**

10ம் ஆண்டு முதல் சகல தரப்பினரும் அரங்கில் கலந்து கொள்ளலாம்.


போட்டி இறுதி நாள்: 10.03.2013

திறமைசாலிகளுக்கு பரிசுகள், சான்றிதழ் வழங்கப்படும்

எழுதி அனுப்பவேண்டிய முகவரி:
செயலாளர்,
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்,
இல. 200, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

பெற்றோர், பாடசாலை, மறைக்கல்வி, ஆசிரியர்களின் தூண்டலால் ஆன்மீக விழுமியங்கள் வளர ஒத்துழைப்பினை எதிர்பாக்கின்றோம். பரிசில்கள் வழங்குவர்கள எம்மிடம் தொடர்பு கொள்வும்.

## சிந்தனைப் புதிர்




**இடமிருந்து வலம்**

1. அன்பு காட்டுவதில் இவருக்கு நிகர் யாரும் இல்லை.
5. "பத்தும் பறந்திடும். இது வந்தால் மறந்திடும்" என்பர்.
9. வணங்கு
13. உருண்டை / கட்டி
17. பெண்ணைக் குறிக்கும்
25. அம்மாவை இப்படியும் அழைப்பர்
29. சாப்பிடு
33. அழகு / செல்வம் / பெரியோர்

**மேலிருந்து கீழ்**

1. சூரியன் மறையும் நேரம்
3. மருத்துவக்குணமுடைய பழவகை ஒன்று
6. புனித சின்னம் ஒன்று
14. தேர்
17. இதற்கு படையும் நடுங்குமாம்
25. இலங்கையில் உள்ள புனித ஸ்தலங்களில் ஒன்று.
27. கிணற்றடியில் இருப்பது / துடைப்பம்
30. புறாவுக்காக தன் தசையை வெட்டிக்கொடுத்த சக்கரவர்த்தி இவர்.

**சிந்தனைப் புதிர்**
இறுதி திகதி 30.03.2013

அனுப்ப வேண்டிய முகவரி
"பாதை"
சென்யோசப் சிறுவர் விடுதி
கல்லூரி வீதி
இளவாலை

வாசக நெஞ்சங்களே!
பாதையின் பயணம்
பத்தாண்டை காண
பல்வேறு தளங்களில் நின்று
பக்க துணையாக நடந்த
நல்வாசக நெஞ்சங்கள்
எழுத்துகளால் உதவி
ஆசிகள் தந்துதவிய பெரியோர்
பலர்கரம் பரவிட மனதோடு
உதவிய யாவர்க்கும்
பத்தாண்டு பயணத்தில்
மனநிறைவான நன்றியோடு
நல்வாழ்த்து கூறுகிறோம்.

## திருமறைக் கலா மன்றத்தின் "காவிய நாயகன்" திருப்பாடுகள் காட்சி

திருமறைக் கலாமன்றத்தினால் நடாத்தப்படும் திருப்பாடுகளின் காட்சி இம்முறை கொழும்பு, இளவாலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அரங்கேற்றுகிறார்கள். தவக்கால சிந்தனைகளை பகிரும் திருப்பாடுகளின் காட்சி "காவிய நாயகன்" எனும் பிரமாண்டமான படைப்பு கொழும்பு புனித லூசியா ஆலய முன்றலில் பங்குனி மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளிலும் இளவாலை திருமறைக் கலா மன்றத்தில் 16ம் திகதியும் யாழ் திருமறைக் கலா மன்றத்தில் பங்குனி 21, 22, 23, 24 ஆகிய தினங்களிலும் அரங்கேறுகிறது.

## மறைபரப்பு சகோதரர் சபையின் வருடாந்த மாகாண சபை தெரிவு

புனித பிரான்சீஸ்கன் மறைபரப்பு சகோதரர் சபையின் வருடாந்த மாகாண சபை தெரிவும் ஒன்று கூடலும் 11ம் திகதி ஆரம்பமாகியது. இந்நிகழ்வை வழிப்படுத்த இந்தியாவின் தலைமை அருட்சகோதர்களும் இலங்கையில் உள்ள மாகாணமட்ட அருட்சகோதரர்கள் புதிய ஆண்டுக்கான மாகாண செயற்குழு தெரிவிலும் திட்டமிடலிலும் பங்கேற்க மாத்தளையில் ஒன்றுகூடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org